# 1

# கடவுள்



நாம் வாழும் இந்த உலகம் உயிருள்ளனவற்றையும் உயிரில்லாதனவற்றையும் கொண்டது. இந்த உலகத்தைப் படைத்து, காத்து, அழிக்கும் சக்தி ஒன்று உள்ளது. அந்தச் சக்தியே கடவுள் என உணரப்படுகின்றது. கட + உள் = கடவுள் ஆகும். அதாவது, எல்லாப் பொருட்களையும் கடந்தும் அவற்றில் கலந்தும் இருப்பது என்பது இதன் பொருளாகும். கடவுள் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர், அளவில்லா ஆனந்தமுடையவர் ஆவார். கடவுள் உலகைப் படைப்பவர். ஆதலால் உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாம் அவரின் குழந்தைகளே. அதனால் அவர் நாம் செய்யும் பாவங்களை

நீக்கியும், பாவங்களைச் செய்யாமல் தடுத்தும், எங்களை நல்வழியில் நிற்கச் செய்கிறார். இத்தகைய கடவுளைப் பற்றியும் அவரின் உண்மைத்தன்மையைப் பற்றியும் வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் முதலான நூல்கள் கூறுகின்றன. அந்தவகையில், சாந்தோக்கிய உபநிடதம் கூறும் கதை ஒன்றின் மூலமாக, கடவுளின் உண்மைத்தன்மை பற்றி விளங்கிக்கொள்வோம்.

உத்தாலகரின் மகன் சுவேதகேது. குருகுலத்தில் வேதபாடங்களைக் கற்று முடித்து வீட்டிற்கு வந்த மகனிடம் தந்தையார் உத்தாலகர், கடவுளின் தன்மை யாது எனக் கேட்டார். சுவேதகேதுவால் பதில் கூறமுடியவில்லை. தந்தையார் மகனிடம் ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பி, அதில் உப்புக்கல்லை இடுமாறு கூறினார். மறுநாள் அந்த உப்புக்கல்லைப் பாத்திரத்திலிருந்து எடுக்கும்படி மகனைப் பணித்தார். சுவேதகேது பாத்திரத்தைப் பார்த்தபோது உப்புக்கல் முற்றாகக் கரைந்து நீர் முழுவதும் செறிந்திருந்தது.

நீரில் உப்புக்கல் கரைந்து பரந்திருப்பதைப் போல் கடவுளும் எங்கும் பரந்திருக்கின்றார் என்று உத்தாலகர் மகனுக்கு விளக்கினார்.

உத்தாலகர் மகனிடம், ஆலம் பழம் ஒன்றைப் பிரித்து அதனுள் இருந்த விதைகளுள் ஒன்றினை எடுக்கச் செய்தார். பின் அதனை மேலும் பிரிக்கச் சொன்னார். அதன்படி செய்த சுவேதகேதுவிற்கு இறுதியில் எதுவும் தென்பட வில்லை. கண்ணுக்குப் புலப்படாத மிகச் சிறிய ஆலம் விதையிலிருந்து பெரிய ஆலமரம் உண்டாகின்றது. அது போலவே கண்ணுக்குப் புலப்படாத கடவுளிலிருந்து இந்த உலகம் தோன்றியது என்பதை விளக்கிக் கூறினார்.

இவ்வாறாக எளிய உதாரணங்கள் மூலமாக உத்தாலகர் கடவுளின் வியாபகத் தன்மையையும் உலகப் படைப்பிற்கு இறைவனே காரணன் என்பதையும் விளக்கிக் கூறினார்.

இவ்வுலகில் எங்கும் பரந்து நிற்கும் இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்து உயிர்களுக்கு அருள்புரிகின்றார். அத்தகு இறைவனை நாமும் வழிபட்டு துன்பம் நீங்கி இன்பமாக வாழ்வோம்.

**பஞ்ச கிருத்தியம் - இறைவனின் ஐந்து தொழில்கள் :**
படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்

## பயிற்சி

1. கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பதை எவ்வாறு அறியலாம்?
2. கடவுளின் தன்மைகள் சிலவற்றைக் கூறுக.
3. கடவுளின் உண்மைத் தன்மையைப் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
4. கடவுள் எங்கும் பரந்துள்ளார் என்பதை உத்தாலகர் எவ்வாறு விளக்கினார்?
5. ஆலம்விதைக் கதையினூடாக எவ்வாறு உலகப்படைப்பு விளக்கப்படுகிறது?

## குழுச் செயற்பாடு

நீங்கள் படித்த தேவாரங்களில் (3) இருந்து கடவுளின் இயல்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளனவற்றை எடுத்துக் காட்டி விளக்குங்கள்.

# 2 ஆலய வழிபாடு - I

## அ. ஆலய வழிபாடு


ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் புரியும் இடம். அதாவது, மக்கள் மன ஒருமைப்பாட்டோடு கடவுளை வழிபடுவதற்கு உரிய இடம் ஆலயமாகும் (ஆ+லயம்), 'ஆ' என்பது பசுவையும், 'லயம்' என்பது ஒடுக்கத்தையும் குறிக்கிறது. 'பசு' என்பது ஆன்மா. இந்த ஆன்மாவானது (ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் நீக்கி) இறைவனிடத்தில் ஒடுங்குவதற்கு உரிய இடமாக அமைவதே ஆலயம் எனப்படும்.

எல்லா இடத்திலும் எல்லாச் செயலையும் செய்வது இயலாத காரியமாகும். இறை வழிபாட்டைக் கிரியைகளின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு ஆலயங்கள் அவசியமானவையாக அமைகின்றன. பசுவின் குருதியே பாலாகின்றது. குருதி பசுவின் உடல் முழுவதும் பரந்துள்ளது. ஆயினும் அதன் மடியிலிருந்து மட்டுமே பால் பெறப்படுகிறது. அது போன்று உலகெங்கும் பரந்திருக்கும் இறைவனின் அருள் கிடைக்கப்பெறும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இதனாலேயே, 'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்' என ஆன்றோர் கூறினர்.

ஆலயமானது மனித உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுகின்றது. ஒரு மனிதன் படுத்திருக்கும் தோற்றத்தில் ஆலயம் அமைகிறது. மூலஸ்தானம் (கருவறை) சிரசையும், அர்த்த மண்டபம் கழுத்தையும், மகா மண்டபம் மார்பையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்து அமையும் மண்டபங்கள் கால்களையும், இராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகின்றது. அதில் அமைந்துள்ள தளங்கள் உலக வாழ்வின் பலவித அநுபவ நிலைகளைக் குறிக்கின்றன. கோபுரத்தில் அமையும் சிற்பங்கள் இறைவனின் திருவிளையாடல்களைச் சுட்டுகின்றன.

# சிவாலய அமைப்பு



1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30
31

கோபுரத்தை தூலலிங்கம் என்று அழைப்பர். இந்தக் கோபுரமானது, சூக்குமலிங்கம் என்றழைக்கப்படுகின்ற மூலமூர்த்தியின் வெளிப்படையான குறியீடாக விளங்கு கின்றது. எம் மனதில் இறையுணர்வை மேலோங்கச் செய்வதாக கோபுரம் அமைந்துள்ளது. 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' ஆகும்.

**சிவாலய அமைப்பு - படவிளக்கம்**

1. கர்ப்பக்கிருகம்
2. அர்த்த மண்டபம்
3. மஹா மண்டபம்
4. சண்டேஸ்வரர் கோயில்
5. அம்பாள் கர்ப்பக்கிருகம்
6. நிருத்த மண்டபம்
7. பள்ளியறை
8. நடராஜர் ஆலயம்
9. ஸ்தம்ப மண்டபம்
10. பாகசாலை
11. பாகசாலை
12. நால்வர்
13. பக்தாலயம்
14. அம்பாள் கோபுரம்
15. சந்தான குரவர்
16. வாகனசாலை
17. பிள்ளையார்
18. சோமாஸ்கந்தர்
19. சந்திரசேகரர்
20. பிக்ஷாடனர்
21. மஹாவிஷ்ணு
22. சுப்பிரமணியர்
23. வசந்த மண்டபம்
24. ஆகம நூல் நிலையம்
25. யாகசாலை
26. வைரவர் ஆலயம்
27. சூரியன்
28. கோபுரவாசல்
29. சந்திரன்
30. கிணறு
31. கிணறு

ஆலயத்தின் சுற்றுப்பிரகாரங்களில் விநாயகர், சுப்பிரமணியர், தட்சணாமூர்த்தி, வைரவர், சண்டேசுவரர், துர்க்கை, இலக்குமி முதலிய பரிவார தெய்வங்களினதும் நவக்கிரகங்களினதும் சந்நிதானங்கள் அமைந்திருக்கும்.

## ஆலயத்திற்குச் செல்லும் முறை

நாம் ஒவ்வொருவரும் ஆலயத்திற்குச் செல்லும்போது நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து செல்ல வேண்டும். தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பால், தயிர், நெய், தேன் முதலான பூசைத் திரவியங்களை எடுத்துச் செல்வது நன்று.

## வழிபாட்டு முறை

ஆலயத்திற்குச் சென்றதும் கால்களைக் கழுவி, கோபுரத்தை வழிபட்டு, இறை சிந்தையோடு உட்செல்லுதல் வேண்டும். கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் முதலிற் பலிபீடத்தையும் அதனை அடுத்து மூலவரை நோக்கிய வண்ணம் அமைந்திருக்கும் திருநந்திதேவரையும் வணங்கி, பின் மூலமூர்த்தியை வணங்குதல் வேண்டும். ஆன்மாவானது இறைவனை அடைவதற்கு எப்போதும் இறை சிந்தனையுடன் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கும் வகையிலேயே நந்திதேவர் மூலவரை நோக்கியவாறு அமர்ந்திருக்கின்றார்.

விநாயகரை வணங்கும்போது முஷ்டியாகப் பிடித்த கைகளால் சிரசில் மூன்று முறை குட்டிக் கும்பிடல் வேண்டும். பின்னர், இடக்கையால் வலக்காதையும், வலக்கையால் இடக்காதையும் மாற்றிப் பிடித்து மூன்றுமுறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம் போட்டு) வணங்குதல் வேண்டும்.

பலிபீடத்துக்கு இப்பால் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். தலை, கைகள், செவிகள், புயங்கள், மோவாய் என்னும் எட்டு அங்கங்கள் நிலத்தில் பொருந்தும்படி வணங்குவது அட்டாங்க நமஸ்காரம் ஆகும். தலை, கைகள், முழங்கால்கள் என்னும் ஐந்து அங்கங்கள் நிலத்தில் பொருந்தும்படி வணங்குவது பஞ்சாங்க நமஸ்காரமாகும்.

நமஸ்காரம் பண்ணும்போது மேற்கு, தெற்கு ஆகிய திசைகளிலேயே கால்களை நீட்டுதல் வேண்டும். நமஸ்காரங்களை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்ற எண்ணிக்கையில் செய்தல் வேண்டும். ஒன்று மற்றும் இரண்டு முறைகள் செய்வது குற்றமாகும். நமஸ்காரம் செய்து எழுந்ததும் இரு கரங்களையும் இதயத்திலே குவித்து இறைவனை மனதில் நினைத்து மெதுவாக ஆலயத்தை வலப்பக்கமாக

சுற்றி வந்து வணங்குதல் வேண்டும். பின்பு, சண்டேசுரரை வணங்கி மீண்டும் வந்து மூலவரை நமஸ்கரித்து, வடக்கு நோக்கி இருந்து, கடவுளைத் தியானித்துக் கொண்டு திருமுறைகளைப் பாராயணம் செய்தல் வேண்டும். தினந்தோறும் ஆலயத்திற்குச் செல்ல முடியாதவர்கள் விசேட தினங்களிலாவது செல்லுதல் நன்று.

## ஆலயத்தில் செய்யத்தகாதவை

ஆலயத்திற்குச் செல்லும்போது ஆசாரமில்லாமல் செல்லக்கூடாது. கால் கழுவாது உட்செல்லுதல் கூடாது. ஆலயச் சூழலில் எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல், தலைமுடி கோதுதல், வெற்றிலை பாக்கு உண்ணுதலும் கூடாது. ஆலயத்தினுள் வீண்வார்த்தை பேசுதல், ஆலயத்தின் விமானம், பலிபீடம், விக்கிரகங்கள் முதலியவற்றின் நிழலை மிதித்தல், விக்கிரகங்களைத் தீண்டுதல், பலிபீடத்திற்குக் குறுக்கே செல்லுதல், ஓடி வலம் வருதல், திரைச்சீலை இடப்பட்டிருக்கும் போது நமஸ்கரித்தல் என்பன குற்றமுடைய செயல்களாகும்.

## *பயிற்சி*

*1. இறைவனை ஏன் ஆலயத்திற்குச் சென்று வழிபட வேண்டும்?*

*2. தூலலிங்கம் எனப்படுவது எது?*

*3. விநாயகரை எவ்வாறு வணங்குதல் வேண்டும்?*

*4. ஆண்கள் செய்யவேண்டிய நமஸ்காரம் யாது? அது செய்யப்படும் முறை யாது?*

*5. பெண்கள் செய்யவேண்டிய நமஸ்காரம் யாது? அது எத்தகையது?*

*6. ஆலயத்தில் செய்யத்தகாத காரியங்கள் எவை?*

## ஆ. ஆலயக் கிரியைகள்



ஆலயங்களில் மூன்று வகையான கிரியைகள் நிகழ்த்தப்பெறுகின்றன. அவை நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமிய கிரியைகள் என்பன வாகும். கிரியைகளில் அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, தீபாராதனை முதலானவை இடம்பெறுகின்றன. கிரியைகள் பற்றிய விளக்கங்களை ஆகமங்கள் கூறுகின்றன.

### நித்திய கிரியை

ஆலயத்தில் தினந்தோறும் நடைபெறும் கிரியைகள் நித்திய கிரியைகள் எனப்படும். இவை ஒவ்வொரு ஆலயத்தினதும் வசதிக்குத்தக்கப்படி நடைபெறு கின்றன. வசதியுள்ள பெரிய கோயில்களில் உஷத்காலம், காலைச்சந்தி, உச்சிக் காலம், சாயரட்சை, இரண்டாம் காலம், அர்த்தசாமம் எனும் ஆறுகாலப் பூசைகள் இடம் பெறுகின்றன. இவற்றை ஷட்காலப் பூசைகள் என அழைப்பர். வசதி குறைந்த கோயில்களில் மூன்றுவேளையோ இரண்டு வேளையோ ஒரு வேளையோ கூட பூசை நடைபெறுவதுண்டு.

### நைமித்திய கிரியை

விசேட காரணத்தின் பொருட்டு நடைபெறுபவை நைமித்திய கிரியைகள் எனப்படும். இவ்விசேடங்கள் வாரத்திற்கு ஒருமுறை அல்லது இருவாரங்களுக்கு ஒருமுறை நிகழும். மாதம் ஒரு முறை, சில மாதங்களுக்கு ஒரு முறை, வருடமொரு முறை மற்றும் பல வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுபவையும் நைமித்திய கிரியைகளே.

## கிரியைகளுக்கான சில உதாரணங்கள்

| நைமித்திய | நைமித்திய கிரியைகள் |
|---|---|
| 1. வாரம் ஒருமுறை | சுக்கிரவாரம், சோமவாரம் |
| 2. இருவாரங்களுக்கு ஒருமுறை | பிரதோஷம் |
| 3. மாதம் ஒருமுறை | கார்த்திகை, சதுர்த்தி, சஷ்டி, மாதப் பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி |
| 4. வருடம் ஒருமுறை | மாசிமகம், சிவராத்திரி, ஆடிப்பூரம், ஆவணிச் சதுர்த்தி, ஆவணிமூலம், நவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, ஆலயத்தின் பிரமோற்சவம் |
| 5. பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை | மகாமகம், கும்பாபிஷேகம் |

## காமிய கிரியை

குறிப்பிட்ட நற்பலன் ஒன்றை விரும்பிச் செய்யப்பெறுவது காமிய கிரியை எனப்படும். அதாவது, குறிக்கோள் ஒன்றினை மனத்திற் கொண்டு அது நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செய்யப்படும் கிரியைகள் அனைத்தும் காமிய கிரியைகளாகும். குறிக்கோளின் காரணமாகச் செய்யப்பெறும் நித்திய, நைமித்திய கிரியைகளும் காமிய கிரியைகளாகவே கொள்ளப்படுகின்றன.

பிரதிபலனை எதிர்பார்க்காமல் கிரியைகளைச் செய்தல் சிறப்பாகும். இது நிஷ்காமிய கிரியை எனப்படும். ஆயினும், உலக வாழ்வில் ஈடுபட்டுள்ள நாம் நம் விருப்பங்கள் நிறைவேறும் பொருட்டு கிரியைகளை நடத்துதல் தவறல்ல. கிரியைகளை முறையாக பக்தி சிரத்தையுடன் கடவுளை நினைந்து செய்வதன் மூலம் உயர்ந்த நிலையை எய்தலாம்.

## பயிற்சி

1. ஆலயத்தில் நிகழ்த்தப்படும் மூன்றுவகைக் கிரியைகள் யாவை?
2. நித்திய கிரியை எனப்படுவது யாது?
3. பெரிய கோயில்களில் நித்திய கிரியைகள் எத்தனை வேளைகள் நடைபெறுகின்றன? அவை எவை?
4. நைமித்திய கிரியைகள் என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தருக.
5. காமிய கிரியை எனப்படுவது யாது?

## குழுச் செயற்பாடு

ஆலயத்தில் இடம்பெறும் பூசையிற் கலந்துகொண்டு அங்கு நடைபெறுவனவற்றை அவதானித்து, பூசை ஒழுங்கினை எழுதுங்கள்.

# 3 சிவராத்திரி



சிவபெருமானை விசேடமாக வழிபடுவதற்குரிய விரதங்களில் சிவராத்திரியும் ஒன்றாகும். சிவனுக்கு உரிய இராத்திரி என்பதால் சிவராத்திரி எனப்படும். சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவை மஹா சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோகசிவராத்திரி, பட்ச சிவராத்திரி, நித்திய சிவராத்திரி என்பவையாகும். மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் நோற்கப்படுவதே மஹா சிவராத்திரியாகும்.

நாம் ஒவ்வொருநாளும் காணும் இராத்திரி சாதாரண இராத்திரியாகும். இராத்திரி என்றால் இருட் காலம் என்பதாகும். உண்மையான இருட்காலம் என்பது இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம். இதனை சர்வசங்கார காலம், பிரளய காலம், ஊழி முடிவு என்றெல்லாம் கூறுவர். இந்தப் பேரிருட் காலத்தில் தனித்து நிற்பவர் சிவபெருமான் ஒருவரேயாவார்.

## சிவராத்திரி பற்றிய புராணக் கதை



ஒரு சமயம் படைப்புக் கடவுளான பிரமனும் காத்தற் கடவுளான விஷ்ணுவும் ஆணவத்தோடு தம்முள் யார் பெரியவர் என முரண்பட்டு வாதிட்டனர். அப்போது அவர்களின் முன்பு சிவபெருமான் பேரொளிப் பிழம்பாகக் காட்சியளித்தார். ''இந்த ஒளிப்பிழம்பின் அடியையாவது முடியையாவது கண்டுவருபவரே பெரியவர்'' என்று ஓர் அசரீரி ஒலித்தது.

பிரமா அன்னப்பட்சி வடிவிற் பறந்து சென்று ஒளிப்பிழம்பின் முடியைக் காண முயன்றார். விஷ்ணு பன்றி வடிவில் மண்ணைக் குடைந்து சென்று அதன் அடியைக் காண முயன்றார். இருவரும் தங்கள் முயற்சிகளில் தோல்வியுற்றனர். தமது இயலாமையையும் சிவபெருமானே பரம்பொருள் என்பதையும் உணர்ந்தனர். இக்கதை மூலம் ஆணவம் கொண்டவர்களால் இறைவனை அறிய முடியாது என்ற பேருண்மை வெளிப்படுகின்றது.

பிரம விஷ்ணுக்கள் சோதிப்பிழம்பின் முடியும் அடியும் தேடிய சம்பவம் நிகழ்ந்த தினமே மகா சிவராத்திரி விரத நாளாகும். இத்தினத்திற் பிரம விஷ்ணுக்களுக்குத் தமது பரத்துவத்தை உணர்த்துவதற்குச் சிவபிரான் இலிங்கத் தில் உற்பவித்து இலிங்கோற்பவ மூர்த்தியாக வெளிப்பட்ட அர்த்தசாமமே

இலிங்கோற்பவ காலமாகும். (இரவு 11.30 முதல் 12.15 வரை) இக்காலம் நித்திரை கொள்ளாது பக்திபூர்வமாக வழிபடற்குரிய புண்ணிய காலமாகக் கொள்ளப்படுகிறது. இலிங்கோற்பவ மூர்த்திக்கு அபிஷேகமும் வில்வ அர்ச்சனையும் செய்வது மேலான பலனைத் தரும். இந்திரன், குபேரன், இராஜசேகரபாண்டியன் போன்றோர் சிவராத்திரி தினத்தில் சிவனை வழிபட்டுப் பெரும்பேறு பெற்றனர்.

## விரத விதிமுறை

மகாசிவராத்திரி தினத்தின் முன்தினமான திரயோதசியில் ஒரு வேளை பகல் உணவருந்தி, மறுநாள் முழுவதும் உபவாசம் இருந்து, சிவராத்திரியின் மறுதினம் பாரணையில் உணவு உண்ண வேண்டும். மேலும் சிவராத்திரி தினத்தில் இரவு முழுவதும் நித்திரை கொள்ளாது விழித்திருந்து, சிவாலயதில் நடைபெறும் நான்கு ஜாமப் பூசை வழிபாடுகளின்போதும் இலிங்க தரிசனம் செய்வது முக்கியமான விதியாகும். விரதம் இருக்க இயலாதோர் (பாலர், விருத்தர், நோயாளர்) இலிங்கோற்பவ காலம் மட்டுமாவது விழித்திருத்தல் நன்று. சிவாலயங்களில் கருவறையின் மேற்குப்புறத்தில் இலிங்கோற்பவர் காணப்படுவார்.



சிவராத்திரி விரத மரபுகள், பலன்கள் என்பன பற்றி புராணக் கதைகள் பல விளக்கியுள்ளன. அவற்றுள் கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், இலிங்க புராணம், சிவமகா புராணம், சிவராத்திரி புராணம் போன்றன குறிப்பிடத்தக்கன.

## விரதம் அனுட்டிப்பதனால் பெறும் நன்மைகள்

உண்மை, அன்பு, நேர்மை முதலான நற்பண்புகளை வளர்ப்பதன் மூலமே இறைவனின் அன்பையும் அருளையும் பெறமுடியும். சிவராத்திரி காலத்தில் வேடிக்கை விளையாட்டுக்களில் ஈடுபடுதல் பாவச் செயலாகும். இறை சிந்தனையுடன் இருப்பதே நல்ல பலன்களைத் தரும். இச்சிவராத்திரி விரதத்தை விதிப்படி அனுட்டிப்பதனால் நாம் பல பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கும். உலகில் நன்மை பெருகும். எங்கள் வாழ்வு வளம் பெறும்.

## பயிற்சி

1. சிவராத்திரி எத்தனை வகைப்படும்? அவை எவை?
2. மஹாசிவராத்திரி எப்போது அநுட்டிக்கப்படுகின்றது?
3. சிவராத்திரி விரதம் நோற்றுப் பலன் பெற்றவர்கள் யாவர்?
4. சிவராத்திரி விரதம் அநுட்டிக்கும் முறையைக் கூறுக.
5. சிவராத்திரி விரதம் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
6. சிவராத்திரி பற்றிய புராணக்கதை கூறும் படிப்பினை யாது?
7. இவ்விரதத்தை அனுட்டிப்பதால் உண்டாகும் நன்மைகள் யாவை?

## குழுச் செயற்பாடு

*சிவராத்திரி தினம் பற்றிய கதையை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.*

# 4 நாள் மங்கலம்

சைவசமயத்தவர்களாகிய நாம் விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள் எனப் பலவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கும் சமூகத்தவருடன் நல்ல உறவை பேணுவதற்கும் இவை வழிவகுக்கின்றன.

நாள் மங்கலம் என்றால் பிறந்தநாள் என்று பொருள். நாள் என்றால் நட்சத்திரத்தைக் குறிக்கிறது. மங்கலம் என்பது ஆக்கம், நன்மை தருவது. நாம் ஒவ்வொருவரும் பிறந்த நட்சத்திரத்துக்குரிய நாள், நமக்கும் பிறருக்கும் மங்கலமானதாக, நன்மை தருவதாக இருக்க வேண்டும் என்பதை இத்தொடர் குறிக்கின்றது.

நமது சமயச் சடங்குகளுள் வாழ்வியற் சடங்குகள் பற்றி முன்னைய வகுப்புகளிற் கற்றுள்ளோம். பெயர் சூட்டுதல், சோறூட்டுதல், ஏடு தொடக்குதல் போன்றவை எமது வாழ்வில் ஒருமுறை மட்டுமே இடம்பெறும். ஆனால் நமது பிறந்த தினம் ஒவ்வொரு வருடமும் நினைவு கூரப்பட்டுக் கொண்டாடப்படும்.

சங்ககால இலக்கியங்களிலும், சோழர்கால இலக்கியங்களிலும் நாள் மங்கல நிகழ்வுகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. மக்களும் மன்னர்களும் நாள் மங்கலத்தை சிறப்பாகக் கொண்டாடியுள்ளார்கள். சோழப் பேரரசனான இராஜராஜன் தனது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடியுள்ளான். அத்தினத்தில் கோயில்களுக்கு மானியங்கள் வழங்கியுள்ளான். இவை பற்றிய குறிப்புக்களை அக்காலக் கல்வெட்டுக்களிற் காணலாம்.

இனி, பிறந்தநாளைக் கொண்டாட வேண்டியதன் அவசியம் பற்றியும் கொண்டாட வேண்டிய முறை பற்றியும் பார்ப்போம்.

இப்பூவுலகில் பிறந்துள்ள நாம் ஒவ்வொருவரும் இறைவனுக்கு நன்றிக்கடன் பட்டவர்கள்; பெற்றோருக்கு நன்றிக்கடன் பட்டவர்கள்; அதுமட்டுமன்றி உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் நன்றிக்கடன் பட்டவர்கள். நாம் பிறந்த தினம் (நட்சத்திர நாள்) இறைவனுக்கும் எம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்றி செலுத்தும் நாளாக அமைய வேண்டும்.

நாம், பிறந்த நாளன்று நீராடி, புத்தாடை அணிவோம். வீட்டில் பூரண கும்பம் வைத்து விளக்கேற்றுவோம். தோத்திரப்பாடல்கள் பாடி இறைவனை வழிபடுவோம். பெற்றோர், பெரியோரிடம் ஆசி பெறுவோம். பெற்றோருடன் கோயிலுக்குச் செல்வோம். நிறைந்த கல்வியையும் நோயற்ற ஆயுளையும் வேண்டி இறைவனை மனதாரக் கும்பிடுவோம். நண்பர்கள், உறவினர்களுடன் பகிர்ந்துண்டு மகிழ்வோம்.

குழந்தை ஒன்று பிறந்ததும் பெற்றோர் அடையும் ஆனந்தம் எல்லையற்றது. அவர்கள் பிள்ளைமீது அன்பு பொழிவார்கள். பிள்ளைகளுக்குத் தேவையான அத்தனை கருமங்களையும் சிரத்தையுடன் செய்து மகிழ்வார்கள். குழந்தையின் பிறப்பு, விசேட மங்கலமாக மாறிவிடும். பெற்றோர் மட்டுமா? பாடசாலை, சமூகம் எல்லாமே ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் கரிசனையோடு செயலாற்றும். 'இன்றைய குழந்தையே நாளைய தலைவன்' என்பதை உணர்ந்து பிள்ளையின் வளர்ச்சியில் யாவரும் அக்கறை செலுத்துவார்கள்.

பிறக்கும்போது நாம் எதையும் கொண்டு வருவதில்லை. ஆனால் பிறந்ததில் இருந்து எமக்குத் தேவையானவை யாவும் ஏதோ ஒரு வகையில் எமக்குக் கிடைத்து வருகின்றன. எனவே எமக்கும் பாரிய பொறுப்பு ஒன்று உள்ளது. நம்மைச் சூழ உள்ளவர்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும் வண்ணம் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். தினமும் அடுத்தவருக்கு உதவி செய்வது சிரமம். ஆயின் மங்கலநாளாகிய எமது பிறந்தநாளிலாவது மற்றவர்களின் மகிழ்ச்சிக்காக சற்றுப் பாடுபடலாம் அல்லவா? அவர்கள் மகிழ்ச்சியில் நாமும் மகிழலாம். வறியவர்கள், முதியவர்கள், குழந்தைகளுடன் எமது 'நாள்மங்கல' நிகழ்வைக் கொண்டாடுவது சிறப்பானது. எமது சிறு உதவி அவர்களைப் பெரிதும் மகிழ்விக்கும்.

பிறந்ததினத்தை மிகுந்த ஆடம்பரமாகக் கொண்டாடிப் பணத்தை விரயம் செய்வது நல்லதல்ல. அந்தப் பணம் தான தருமங்களுக்கென ஒதுக்கப்படுவது இறைவனுக்கு செய்யப்படும் பூசைக்கு நிகரானது. மேலைநாட்டுப் பண்பாடு சார்ந்து எமது பிறந்தநாளைக் கொண்டாடுவது தவிர்க்கப்படவேண்டும். தீபத்தை ஏற்றுவது மங்கலமாகும். வாயால் ஊதி அணைத்தல் அமங்கலமாகும். அது எமது பண்பாட்டுக்கு ஏற்ற வழக்கமன்று. மங்கல நாளாகிய அன்றைய தினம் விளக்கேற்றிக் குடும்பத்தாரோடு இறைவனை வழிபடுவோம். புண்ணிய காரியங்களைச் செய்து நாமும் மகிழ்வோம். பிறரையும் மகிழ்விப்போம்.

## பயிற்சி

1. 'நாள் மங்கலம்' என்பதன் விளக்கம் யாது?
2. வாழ்வியற் சடங்குகளுள் பிறந்தநாள் எவ்வகையில் வேறுபடுகிறது?
3. நாம் ஏன் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும்?
4. பிறந்த நாளை எவ்வாறு கொண்டாடுவது சிறப்பானது?
5. பிறந்த நாளில் நாம் ஏன் புண்ணிய காரியங்களில் ஈடுபட வேண்டும்?

## குழுச் செயற்பாடு

உங்கள் பிறந்த நட்சத்திரத்தன்று நீங்கள் மற்றவர்களை மகிழ்விப்பதற்காகச் செய்யக்கூடிய செயல்கள் சிலவற்றை எழுதுங்கள்.

# 5 சம்பந்தர் தேவாரம்



## அ. தேவாரம் - 1

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மூன்று வயதில் ஞானப்பாலை உண்டு தேவாரம் பாடியவர். சிவபெருமானே எல்லா உயிர்க்கும் தஞ்சம் என்று உணர்ந்தவர். அப்பெருமானை வழிபடத் தமிழ் நாட்டிலுள்ள பல தலங்களுக்கும் யாத்திரை செய்தவர். பண்ணோடு தேவாரம் பாடி இறைவனைத் துதித்தவர்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமெல்லாம் கோயிலாக விளங்கினும் சிதம்பரத் தலமே கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ஒருமுறை சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார். அப்போது தில்லை மூவாயிரவர் எனச் சிறப்பிக்கப்படும் அந்தணர்களும், ஏனைய அடியார்களும் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். நன்கு அலங்கரிக்கப்பட்ட வீதிவழியே எழுந்தருளிய சம்பந்தப் பெருமான் கோபுரத்தைப் பணிந்தெழுந்து திருவீதி வலம்வந்து கோயிலினுட் சென்றார். அங்கே அனவரதமும் ஆனந்தத்

திருக்கூத்தாடும் அம்பலத்தரசனைக் கும்பிட்டு எழுந்தார். மகிழ்ச்சி பொங்கப் பதிகம் பாடியருளினார். அப்பதிகத்தில் முதலாவது பாட்டு இங்கு தரப்பட்டுள்ளது.

***தலம்- கோயில் (சிதம்பரம்)*** ***பண்- குறிஞ்சி***

***திருச்சிற்றம்பலம்***

***கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே***
***செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய***
***முற்றா வெண் திங்கள் முதல்வன் பாதமே***
***பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.***



***திருச்சிற்றம்பலம்***

## பொழிப்பு

வேதாகமங்களிற் கற்றபடி தீ வளர்த்து, வேள்விகளைச் செய்து, நாட்டிலே துன்பம் வராதபடி காக்கின்ற அந்தணர்கள் தில்லையிலே வாழ்கின்றனர். இத்தகைய சிறப்புப் பொருந்திய சிற்றம்பலத்தின் கண்ணே இளம்பிறையைத் தம் சடாமுடியில் தாங்கியபடி எழுந்தருளியிருப்பவர் சிற்றம்பலநாதர். மூவுலகங்களுக்கும் முதல்வராகிய எம்பெருமானின் தூக்கிய திருவடியைப் பற்றிக்கொண்டவர்களைப் பாவங்கள் பற்றி வருத்தாது.

இப்பாடல், தில்லைச் சிற்றம்பலநாதரின் திருவடியைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்களைப் பாவங்கள் பற்றிக்கொள்ளமாட்டாது என்கின்றது.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| கலி | - | துன்பம், வறுமை, கேடு |
| செற்றார் | - | ஒழித்தார் |
| முற்றா வெண்திங்கள் | - | இளம் பிறைச் சந்திரன் |

## பயிற்சி

1. *சிதம்பரத்தின் சிறப்பு யாது?*
2. *சிதம்பரத்தலத்தில் வேள்விகளைச் செய்வோர் யார்?*
3. *வேள்வி எவ்வாறு செய்யப்படுகிறது? அதன் நோக்கம் யாது?*
4. *யாரைப் பாவங்கள் பற்றாது என்று இப்பாடலிற் கூறப்படுகிறது?*
5. *இப்பாடலில் தில்லைச் சிற்றம்பலத்து இறைவனின் தோற்றம் பற்றி யாது குறிப்பிடப்பட்டுள்ளது?*

## ஆ. தேவாரம் - 2

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மதுரையிலே பாண்டிய மன்னனைச் சமண சமயத்திலிருந்து மீட்டெடுத்துச் சைவனாக்கினார். திருநீற்றின் மகிமையை விளக்கியருளினார். அப்போது சீர்காழியிலே அவரது தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிள்ளையின் பிரிவுக்கு ஆற்றாது வருந்தி மதுரையை வந்தடைந்தார். சம்பந்தர் அவரைக் கண்டதும் தோணியப்பரதும், பெரியநாயகியாரதும் திருவடிகளைச் சிந்தித்தார். ''எனை அறியாப் பருவத்தே ஆட்கொண்ட பெருந்தகை எம்பெரு மாட்டியுடன் இருந்ததே'' என்று நினைந்து பதிகத்தைப் பாடினார். அப்பதிகத்தின் முதற்பாடலைப் பாடுவோம்.

***தலம் - திருக்கழுமலம்*** ***பண் - கொல்லி***

***திருச்சிற்றம்பலம்***

***மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்***
***எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை***
***கண்ணில் நல்லஃது உறும் கழுமல வளநகர்***
***பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே***



***திருச்சிற்றம்பலம்***

### பொழிப்பு

எங்கு பார்த்தாலும் கண்ணில் நல்ல காட்சியே படுகின்ற, செழிப்புமிக்க நகர் திருக்கழுமலம். இங்கு பெருந்தகையாளரான திருத்தோணியப்பர் பெண்களுள் நல்லாளாகிய உமாதேவியாருடன் இருக்கிறார்.அப்பெருந் தகைமையை உடைய இறைவனை வணங்குபவருக்கு இப்பூவுலகில் யாவரும் போற்ற வாழும் வாழ்வு உண்டாகும். சிந்தித்துப் பார்த்தால் மறுமையிலும் நல்ல முத்திப்பேற்றுக்கு சிறிதளவேனும் குறைவு உண்டாகாது.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| மண் | - | பூமி |
| வைகலும் | - | நாள்தோறும் |
| நல்லகதி | - | வீடுபேறு |
| கழுமலம் | - | சீர்காழி |

## பயிற்சி

1. திருக்கழுமலத்தில் இறைவனும் இறைவியும் எப்பெயரோடு வீற்றிருக்கிறார்கள்?
2. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ' யாது செய்தல் வேண்டும் என்று இப்பாடலிற் கூறப்பட்டுள்ளது?
3. திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்த காரணம் யாது?

## குழுச் செயற்பாடு

வகுப்பறையில் தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.

# 6 புதுவருடப் பிறப்பு



## பண்டிகை

பண்டிகை என்ற சொல் பெருநாள், விசேட நாள் என்னும் பொருளைத் தரும். சமயம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் பல்வேறு வழிபாடுகள், விருந்துகளுடன் கொண்டாடப்படுவது பண்டிகையாகும். பண்டிகைகள் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகளைத் தருகின்றன.

பண்டிகை நாட்களில் மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, புத்தாடை அணிவர். அதன் பின்னர் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவர். விசேட உணவு வகைகளைத் தயாரித்து, உற்றார் உறவினருக்கும் ஏழைகளுக்கும் பகிர்ந்தளித்து உண்பர்.

## பண்டிகை நாட்களில் இறைவழிபாட்டில் ஈடுபடுதல்

நாம் விரும்பும் பொருள்களை எல்லாம் பண்டிகை என்ற பெயரால் இறைவனோடு சம்பந்தப்படுத்துகின்றோம். அப்பண்டிகை நாட்களில் செய்யும் பல்வேறு சிறப்புக் கருமங்களை இறைவனுக்கு அர்ப்பணிக்கும்போது எம் மனதில் திருப்தி ஏற்படுகின்றது. எல்லாப் பொருட்களிலும் கடவுளைக் காணும் பக்குவத்தைப் பண்டிகைகளும், விழாக்களும் ஏற்படுத்துகின்றன. சுவையாய் உண்பதும், புத்தாடை அணிவதும், மகிழ்ச்சியாக இருப்பதுங்கூட இறைவனின் அருளினாலேதான் என்பதை நாம் இச்சந்தர்ப்பத்தில் உணரலாம் அல்லவா?

## பண்டிகையின் நன்மைகள்

உறவினர்களின் இல்லங்களுக்குச் சென்று வாழ்த்துக் கூறுதல், அளவளாவி மகிழ்தல், குடும்பத்தினரிடையே இருந்த மனக் கசப்புக்களை மறந்து உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுதல், குடும்ப அங்கத்தவரிடையே நெருக்கத்தையும் அன்புப் பிணைப்பையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் முதலானவை பண்டிகைகளால் உண் டாகும் நன்மைகளாக அமைகின்றன. உணவைச் சுருக்குதல், ஒழித்தல் விரதத்தின் ஆதாரமாய் இருக்க, பலவகை உணவுகளை எல்லோரும் கூடியுண்ணும் விருந்து வைபவமாய் பண்டிகைகள் விளங்குதல் குறிப்பிடத்தக்கது. தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி முதலியன நாம் கொண்டாடும் பண்டிகைகளாகும்.

## சித்திரை வருடப் பிறப்பு



பன்னிரு மாதங்களைக் கொண்டது ஒரு வருடம். சூரியன் ஒவ்வொரு ராசியிலும் சஞ்சரிக்கும் காலப்பகுதியே மாதங்களாகக் கொள்ளப்படுகிறது. பன்னிரு இராசிகளுள் முதலாவதான மேடராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம், சித்திரை மாதமாகும். சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாளையே புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம். இப்புதுநாளில் நாம் அனுபவித்த துன்ப, துயரங்கள் மறையும்; பழைய பகைமைகள் நீங்கும்; புத்தெழுச்சியும், புத்துணர்வும் ஏற்படும்; சகல நன்மைகளும், மங்களமும் உண்டாகும். இப்புத்தாண்டு தினத்தில் சூரியதேவனுக்குப் பொங்கல் பொங்கி வழிபடும் வழக்கமும் காணப்படுகிறது.

## புதுவருடப் பிறப்புப் பாரம்பரியங்கள்

ஆலயங்களில் அர்ச்சகர்கள் மருத்துவகுணமுடைய இலைகள், பூ வகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீரில் இட்டுக் காய்ச்சி மருத்து நீர் தயாரிப்பார்கள். இம் மருத்துநீரைக் காணிக்கை செலுத்திப் பெற்று வந்து தந்தை, தாய் அல்லது பெரியவர்களைக் கொண்டு தலையில் தேய்த்து ஸ்நானம் செய்தல் வேண்டும். வருடம் பிறக்கும் புண்ணிய காலத்தில் வீட்டில் பொங்கலிட்டு, பூசை செய்தல் வேண்டும். அன்றைய தினம் புத்தாடை அணிந்து மங்கலப்பொருட்களைத் தரிசிப்பதும் வழக்கமாகும். ஆலய வழிபாடு செய்தலும் தந்தை, தாய், குரு, பெரியோர், உறவினர்களிடம் ஆசி பெறுதலும், முக்கியமானவையாகும்.



அறுசுவை உணவு உண்ணல், கைவிசேடம் பெறுதல், வகை வகையான பாரம்பரிய பலகாரங்கள், உணவுப் பண்டங்கள் உண்டு மகிழல் என்பன வருடப் பிறப்பின் சந்தோஷமான நிகழ்வுகளாகும். கைப்புச் சுவையுடைய வேப்பம் பூவையும், இனிப்புச் சுவையுடைய கரும்பு வெல்லத்தையும் சேர்த்துப் பக்குவப்படுத்தி அன்றைய தினம் உண்பது, வாழ்வில் எதிர்கொள்ளும் இன்ப, துன்பங்களைச் சமமாகக் காணும் பக்குவம் வரவேண்டும் என்பதற்காகவேயாகும்.



மன மகிழ்ச்சி தரும் மரபுவழி விளையாட்டுக்களில் ஈடுபடுதல், உறவினர்களின் இல்லங்களுக்குச் சென்று நலம் விசாரித்து மகிழ்தல், புதுக்கணக்குப் பதிதல், ஏர் மங்கலம், வித்தியாரம்பம் போன்றவை செய்தலும் புதுவருடத்துச் சிறப்பம்சங்களாகும். மக்கள் தமது வேலைகளைப் புத்தாண்டு பிறந்த பின் சுபநேரத்தில் ஆரம்பிப்பார்கள். அத்துடன் புதுப் பஞ்சாங்கம் பார்த்து அவ்வருடப் பலன்களை அறிந்து கொள்ளுதலும் மரபாகும்.

## பயிற்சி

1. பண்டிகை என்றால் என்ன?
2. பண்டிகைகளைக் கொண்டாடுவதால் உண்டாகும் நன்மைகள் மூன்று கூறுக.
3. புதுவருடப் பிறப்பை எப்போது நாம் கொண்டாடுகிறோம்?
4. மருத்துநீர் யாரால், எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?
5. புதுவருடத் தினத்தன்று நாம் ஆரம்பிக்கும் நாட்காரியங்கள் எவை?

## குழுச் செயற்பாடு

புதுவருடப் பிறப்பன்று நீங்கள் செய்த நற்காரியங்கள் பற்றிப் 'பேச்சு' ஒன்றை நிகழ்த்துங்கள்.

# 7

# கண்ணப்ப நாயனார்



## திண்ணனார் வேடர் தலைவன் ஆதல்

உடுப்பூர் என்னும் ஊரில் நாகன் என்னும் வேடர் தலைவன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி பெயர் தத்தை. அவர்களுக்கு இறைவன் அருளால் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அவர்கள் அப்பிள்ளைக்குத் திண்ணன் என்று பெயர் சூட்டினர். திண்ணன் வளர்ந்து, வில்வித்தை கற்று அதிலே சிறந்து விளங்கினான்.

நாகன் முதுமை காரணமாகத் தலைமைப்பதவியைத் திண்ணனாருக்குக் கையளித்தான். அதிகாரம் பெற்ற திண்ணனார் வேட்டுவ மரபின்படி கன்னி வேட்டைக்குப் புறப்பட்டார். தோழர்களான நாணன், காடன் என்னும் இருவருடன் திண்ணனார் காட்டுக்குச் சென்றார். வேட்டையாடும் போது ஒரு

பன்றி வலையை அறுத்துக் கொண்டு ஓடியது, திண்ணனார் அதைத் துரத்திக் கொன்றார். தம் களைப்பையும் பசியையும் போக்க விரும்பிய திண்ணனார், தாம் கொன்ற பன்றியை நெருப்பிலே வாட்டி உண்ண விரும்பினார். மூவரும் நீர் தேடி அருகிலுள்ள பொன்முகலி ஆற்றை நோக்கிச் சென்றனர்.

சற்றுத்தூரம் நடந்ததும் எதிரே காளத்திமலையைக் கண்டனர். ''அந்தமலை மீது குடுமித்தேவர் இருக்கிறார்; நாம் போனால் கும்பிடலாம்'' என்று நாணன் கூறினான். மலையை அணுக அணுக திண்ணனாருக்கு ஏதோ பாரம் குறைந்து வருவது போலிருந்தது. உள்ளத்திலும் இனம்புரியாத இன்பம் உண்டானது.

ஆற்றங்கரையில் பன்றியைத் தீயில் வாட்டும்படி காடனுக்குக் கட்டளை பிறப்பித்து விட்டுத் திண்ணனார், காளத்திநாதரை வணங்க நாணனுடன் மலை ஏறினார்.

அங்கு எழுந்தருளியிருக்கும் காளத்தியப்பரை மெய்யன்போடு வணங்கினார். இறைவன் திருநோக்கால் முன்னுள்ள குணங்கள் மாறி அன்புருவமானார். மனம் கசிந்து உருகிநின்ற திண்ணனார், ''ஐயையோ கொடிய மிருகங்களுள்ள காட்டில் யாதொரு துணையுமில்லாமல் நீர் தனியே இருக்கின்றீரே'' என்று கூறி வருந்தினார்.

''எம்பெருமானே! நீர் பசியோடு இருக்கின்றீர்போல் தோன்றுகிறது. அடியேன் உமக்கு மென்மையான நல்ல இறைச்சியைக் கொண்டு வருவேன்'' என்று கூறினார். பின் எம்பெருமானைப் பிரிந்து செல்ல மனமின்றி, போவதும் வருவதுமானார். இறுதியில் காளத்தியப்பருக்கு இறைச்சி கொண்டு வரும்பொருட்டுக் காடன் இருக்கும் இடம் சென்றார்.

திண்ணனார் பன்றி இறைச்சியைத் தாமே நெருப்பில் வாட்டினார். வெந்த இறைச்சித் துண்டுகளை மென்று சுவை பார்த்து நல்லனவற்றை மட்டும் தேக்கிலைக் கல்லையிலே வைத்தார். பின் எம்பெருமானைத் திருமஞ்சனமாட்டும் பொருட்டு ஆற்றுநீரை வாயினுள் முகந்தார். அருகில் மலர்ந்திருந்த பூக்களைக் கொய்து குடுமியிலே செருகினார். ஒரு கையில் வில்லையும் அம்பையும் எடுத்தார். மறுகையிலே தேக்கிலைக் கல்லையை எடுத்தார். இறைவனது பசியைத்

தீர்க்கும் பதைபதைப்புடன் ஓடோடிச் சென்றார். மலை உச்சியை அடைந்ததும் எம்பெருமானுக்கு மஞ்சனமாட்டி, பூச்சூட்டி, இறைச்சியைத் திருவமுதாகப் படைத்தார். அன்றிரவு முழுவதும் தூங்காமல் வில்லும் கையுமாக இறைவனுக்குக் காவலிருந்தார். விடிந்ததும் திண்ணனார், இறைவனுக்கு ஊனமுது தேடிப் புறப்பட்டார்.

## சிவகோசரியாரின் பக்தித்திறன்

காளத்தியப்பரை நாள்தோறும் சிவாகம விதிப்படி வழிபட்டுவரும் சிவகோசரியார் என்பவர் காலையில் பூசை செய்யச் சென்றார். அங்கு எலும்பும் இறைச்சியும் சிதறுண்டு கிடக்கக் கண்டார்; மனம் மிக வருந்தினார். அவ்விடத்தைத் திருவலகிட்டுத் தூய்மைப்படுத்தினார். பூசை செய்து முடிந்ததும் வீடு திரும்பினார்.

திண்ணனார் பகலில் வேட்டையாடி ஊனமுது தேடி இறைவனுக்கு அன்போடு திருவமுது செய்துவந்தார். இரவில் காளத்திநாதருக்குக் காவல் புரிந்து நின்றார். திண்ணனார் ஒப்புயர்வற்ற அன்புநெறியிலே ஒழுகுவாராயினார்.

சிவகோசரியார் தினமும் மனம் நொந்தபடி திண்ணனார் படைத்த இறைச்சி முதலானவற்றை நீக்கி, விதிப்படி பூசை செய்து வந்தார். ''இத்தீமையை உமதருளால் ஒழித்தருள வேண்டும்'' என்று இறைவனை இறைஞ்சி நின்றார் சிவகோசரியார்.

திண்ணனாரின் அன்புப் பெருக்கத்தைச் சிவகோசரியாருக்கு உணர்த்த விரும்பிய இறைவன் அவருடைய கனவில் தோன்றினார். ''அவன் வடிவெல்லாம் நம்மிடத்துக் கொண்ட அன்பேயாம்'' என்று கூறி, திண்ணனார் செய்கையை மறுநாள் மறைந்திருந்து பார்க்கும்படியும் கூறியருளினார்.

## திண்ணனார் கண்ணப்பராதல்

பொழுது விடிந்ததும் சிவகோசரியார் இறைவனைப் பூசித்து, பின்புறத்தில் ஒளிந்திருந்தார். வேட்டையாடச் சென்ற திண்ணனார் திரும்பினார். வரும்போது பல தீய சகுனங்கள் நேர்ந்தன. மனம் மிகக் கலங்கிய திண்ணனார் ஓடோடி வந்து

காளத்தியப்பரை அடைந்தார். காளத்திநாதரின் வலக்கண்ணிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டு துடிதுடித்தார். ஓடிச் சென்று பச்சிலை மருந்துகளைப் பிடுங்கி அவற்றைப் பிழிந்து எம்பெருமானின் கண்களில் வார்த்தார். இரத்தம் வடிதல் தடைப்படாமை கண்டு மிகவும் வருந்தினார். சுவாமியின் திருமேனியைப் பற்றியபடி கதறியழுதார். 'ஊனுக்கு ஊனிடல் வேண்டும்' எனும் பழமொழி அவர் நினைவுக்கு வந்தது. கண்ணுக்குக் கண்கொடுக்க விரும்பிய திண்ணனார் அம்பினாலே தம் கண்ணைத் தோண்டி இறைவனது கண்ணில் அப்பினார். உடனே இரத்தம் வடிதல் நின்றது. திண்ணனார் ஆனந்தத்துடன் கூத்தாடினார்.

திண்ணனாரின் அன்புள்ளத்தை முழுமையாகச் சிவகோசரியாருக்கு உணர்த்த விரும்பிய காளத்தியப்பர் தம் இடக்கண்ணிலிருந்தும் இரத்தம் வடியச் செய்தார். உடனே அவர் செருப்புக்காலை எம்பெருமானின் கண்ணருகில் அடை யாளத்துக்காக ஊன்றி, மற்றைய கண்ணையும் தோண்ட அம்பை வைத்தார். அப்போது, கருணைக் கடலாகிய காளத்தியப்பர், ''நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!'' என்று திருவாய் மலர்ந்து தம் திருக்கரத்தால் திண்ணனாரைத் தடுத்தார். ''மாறிலாய் என் வலத்தில் நிற்க'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அன்று முதல் திண்ணனார் கண்ணப்பர் ஆயினார். ஆசாரசீலரான சிவகோ சரியார் கண்ணப்பரின் உண்மை அன்பினை உணர்ந்து வியந்தார்.

இறைவன் தன்னலமற்ற அன்புக்கு அடிமையாகும் தன்மையர் என்பதைக் கண்ணப்ப நாயனார் வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகிறது. நாமும் தன்னலமின்றி அன்பு செய்வோம். நன்மைகள் பெறுவோம்.

கண்ணப்ப நாயனார் இறைவன் மீது கொண்ட அன்பையும் அவரின் தோற்றப் பொலிவையும் வியந்து திருநாவுக்கரசு நாயனார் பாடிய தேவாரப் பாடல் இதுவாகும்.

திருச்சிற்றம்பலம்

காப்பதோர் வில்லும் அம்பும்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெரும் செருப்புத் தொட்டுத்
தூய வாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்யக்
குருதிநீர் ஒழுகத் தன் கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கை வீரட்டனாரே.



திருச்சிற்றம்பலம்

## பயிற்சி

1. திண்ணனின் பெற்றோர் யாவர்? நண்பர்கள் யாவர்?
2. காளத்தி மலையை அணுகும்போது திண்ணனாரிடம் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
3. இறைவனுக்குரிய இறைச்சியை திண்ணனார் எவ்வாறு தயார் செய்தார்?
4. சிவகோசரியார் தினமும் எவ்வாறு பூசை செய்து வந்தார்?
5. காளத்திநாதரின் வலக்கண்ணிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்ட திண்ணனார் யாது செய்தார்?
6. “மாறிலாய் என் வலத்தில் நிற்க” என்ற அடியின் பொருள் யாது?
7. இக்கதை உணர்த்தும் படிப்பினை யாது?

## குழுச் செயற்பாடு

கண்ணப்பர் கதையை வகுப்பறையில் நாடகமாக்கி நடியுங்கள்.

# 8 அப்பர் தேவாரம்

## அ. தேவாரம் - 1



நாங்கள் எவ்வளவுக்கு மனம் உருகி உருகி இறைவனை வணங்குகின்றோமோ, அவ்வளவுக்கு இறைவனுடன் ஒன்றுபடுகின்றோம். இறைவன் திருவுள்ளத்துக்கு உவந்த தொண்டர்களாகவும் மாறிவிடுகின்றோம். உழவாரப் படையாளி என்று போற்றப்படும் அப்பர் சுவாமிகள் தம் வாணாள் முழுவதும் இறைவன் சந்நிதியிலே நின்று மனமும் மெய்யும் உருக வழிபட்டவர். சரியைத் தொண்டை தம் வழிபாட்டு மார்க்கமாகக் கொண்டவர்.

சுவாமிகள், ஒருமுறை திருமருகலை அடைந்து, அங்கு சிலகாலம் தங்கியிருந்தார். அருகிலே சிறுத்தொண்ட நாயனார் வாழ்ந்த பதியான திருச் செங்காட்டங்குடி அமைந்திருந்தது. அத்தலத்தைப் போற்றிப் பாடிய நாவுக்கரசர், பின்னர் திருமருகலில் உறையும் மாணிக்க வண்ணப் பெருமானையும், வண்டுவார் குழலி அம்மையாரையும் பாடிப் பரவினார்.

## *திருக்குறுந்தொகை*

*தலம் - திருமருகல்*

*திருச்சிற்றம்பலம்*



***பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்***
***திருகலாகிய சிந்தை திருத்தலாம்***
***பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்***
***மருகலான்அடி வாழ்த்தி வணங்கவே.***

*திருச்சிற்றம்பலம்*

### *பொழிப்பு*

திருமருகற் பெருமானுடைய திருவடிகளை வாயினால் வாழ்த்தி உடம்பினால் வணங்கின மாத்திரத்தே, தவத்தில் மேம்படலாம்; அறியாமை நீங்கப் பெறலாம்; மாறுபட்ட மனத்தைத் திருத்திக் கொள்ளலாம்; எதற்கும் மேலான சிவானந்தமாகிய தேனை உண்டு அனுபவிக்கலாம்.

### *அரும்பதம்*

| | | |
|---|---|---|
| பேதைமை | - | அறியாமை |
| திருகல் | - | மாறுபாடு |
| சிந்தை | - | மனம் |

## பயிற்சி

1. திருமருகற்பெருமானுடைய திருவடிகளை நாவுக்கரசர் எப்படி வழிபட்டார்?

2. 'வாழ்த்தி வணங்குதல்' என்ற தொடரினால் உணர்த்தப்படுவது யாது?

3. திருமருகல் இறைவனை வணங்கினால் கிடைக்கும் பேறுகள் யாவை?

## ஆ. தேவாரம் - 2

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கினர். பின்னர் இருவரும் இணைந்து திருமறைக்காட்டிற்குச் சென்றனர். அத்திருக்கோயிலின் கதவு தாழிடப்பட்டு எவராலும் திறக்கப்பட முடியாதிருப்பதை அறிந்தனர். இரு குரவர்களும் இறைவனைத் துதித்து நின்றனர். அக்கதவருகே சென்ற திருநாவுக் கரசு சுவாமிகள் கதவு திறக்கப் பாடியருளினார். சம்பந்தப் பெருமான் கதவை அடைக்கப் பாடினார். இந்நிகழ்வுகளினால் இறைவன் அடியார்க்கு எளியவன் என்பதும் அடியார்களின் தூய விருப்பங்களை நிறைவேற்றுபவன் என்பதும் வெளிப்படுகின்றன. நாமும் இறைவனை அன்போடு வழிபட்டு வளமாக வாழ்வோமாக.

## திருக்குறுந்தொகை

தலம் - திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம்

**பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ**
**மண்ணினார் வலம் செய்ம் மறைக்காடரோ**
**கண்ணினால் உமைக் காணக் கதவினைத்**
**திண்ணமாகத் திறந்து அருள் செய்ம்மினே.**



திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசர்

### பொழிப்பு

இனிமையான மொழி பேசுகின்ற உமாதேவியாரை இடப்பாகத்தில் கொண்டமைந்தவரே, பூமியிலே உள்ளவர்கள் வலம் செய்து வணங்குதற்குரிய முறையில் திருமறைக் காட்டில் கோயில் கொண்டவரே, இறைவா! உம்மைக் கண்ணால் கண்டு தொழுவதற்காகக் கதவினை உறுதியாகத் திறந்து அருள் செய்யும்!

### அரும்பதம்

| | | |
|---|---|---|
| உமைபங்கர் | - | உமாதேவியாரை இடப்பாகத்திற் கொண்டவர் |
| மறைக்காடர் | - | திருமறைக்காட்டு இறைவன் |
| திண்ணமாக | - | உறுதியாக |

## பயிற்சி

1. சம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானும் இணைந்து செய்த அற்புதங்கள் எவை?
2. கதவு பூட்டப்பட்டிருந்த தலம் எது?
3. இப்பாடலில் சிவபெருமான் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்?
4. பூட்டப்பட்டிருந்த கதவைத் திறக்கப் பாடியவர் யார்? பின் அடைக்கப் பாடியவர் யார்?

## குழுச் செயற்பாடு

வகுப்பறையில் தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.

# 9 விரதங்கள்

## விரதங்களும் பயன்களும்



நேர்வழியில் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு இறையுணர்வும், மனவலிமையும் தேவைப்படுகின்றன. இதற்கு விரதங்கள் முக்கிய சாதனங்களாக அமைகின்றன. விரதம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்களாகும். சைவ சமய பாரம்பரியங்களைப் பேணி அவற்றை வாழ்விற் கடைப்பிடிப்பதற்கு நாம் அனுஷ்டிக்கும் விரதங்கள் பற்றிய அடிப்படை அறிவு எமக்குத் தேவைப்படுகின்றது.

நமக்கு உரியன எனக் கருதும் எல்லாவற்றையும் இறைவனுடையவை என எண்ணுவதும், எல்லாம் அவனுக்கே என அர்ப்பணம் செய்வதும் எம்மை ஆன்மீக வாழ்விற்கு இட்டுச்செல்லும் படிமுறைகளாகும்.

''விரதமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்'' என ஆறுமுகநாவலர் குறிப்பிடுகிறார்.

## விரதம் அனுட்டிக்கும் விதிமுறை

நாம் விரத தினங்களில் வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மைப்படுத்துகின்றோம். நாமும் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை அணி கின்றோம். பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சில விரதங்களில் தூக்கத்தையும் தவிர்த்துக் கொள்கிறோம். இறைவனோடு ஒன்றி இருக்கிறோம். விரதமுடிவில் தூய்மையான பாத்திரங்களில் உணவு சமைத்து இறைவனுக்கு நிவேதனமாக்கி உறவினருடன் சேர்ந்து உண்ணுகின்றோம். இவை சைவ மக்களின் பாரம்பரியமாக உள்ளன. இப்பண்புகள் அகத் தூய்மையையும், புறத்தூய்மையையும் வளர்ப்பதற்கு வாய்ப்பாக அமைகின்றன. இவை மற்றவர்களுக்கு உதவும் பண்பையும் வளர்க்கின்றன. ஒவ்வொரு விரதமும் கட்டுப்பாடுகள், சிறப்பான வழிபாட்டு முறைகள் என்பவற்றைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆனால் பொது வான விதிமுறைகளாக அதிகாலையில் துயில் எழல், நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடையணிதல், இறைவழிபாடு செய்தல், ஆலயங்களில் இறைதரிசனம் செய்தல், தோத்திரங்களை ஓதுதல், உணவைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல், மனக்கட் டுப்பாடு பேணுதல் என்பன காணப்படுகின்றன.

## உபவாசம்

உபவாசம் என்பது இறைவனின் அருகில் வசித்தல் என்னும் பொருளைத் தரும். உணவு வகைகளை விடுத்து இறை தியானத்தில் லயிக்கும் தீவிர நியமத்தை உபவாசம் எனலாம். விழித்திருந்து இறைவனைத் தியானித்தல் மேலான பலனைத் தருகின்றது. உபவாசத்தின் மறுநாள் விரதத்தை முடித்துவைக்கும் பாரணை வேளையின் போது அடியார்களுடன் உணவு உண்ணுதல் வழக்கமான ஒன்றாகும்.

## விரதத்தின் பயன்கள்

விரதம் அனுட்டிப்பதனால் வாழ்வில் தன்னம்பிக்கை, பணிவு, பக்தி, அன்பு, தியாகம், சகிப்புத்தன்மை போன்ற ஆன்மீக மேம்பாடுகளுடன், ஒழுக்கம், நேர்மை போன்ற நற்குணங்களும் விருத்தியடையும். இறைவனின் பேரருளும் எமக்குக் கிடைக்கும்.

## விரத வகைகள்

விரதங்கள் மனதை ஒருநிலைப்படுத்தி பக்தி மார்க்கத்தில் அனைவரையும் ஈடுபடுத்தப் பெரிதும் உதவுகின்றன. சைவ மக்கள் அனுட்டிக்கும் விரதங்களை இரு பெரும் வகைகளாகப் பிரிக்கலாம். அவை கடவுளுக்குரியவை, பிதிர்களுக்குரியவை. கடவுளுக்குரிய விரதங்களுள் பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், ஆனி உத்தரம் ஆகிய விரதங்கள் பற்றி இங்கு நோக்குவோம்.

### 1.பங்குனி உத்தரம்

பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரம் பூரணையில் கூடுவதால் பங்குனி உத்தரம் விசேடமாயிற்று. நட்சத்திர வரிசையிலே உத்தர நட்சத்திரம் பன்னிரண்டாவதாகும். சிவபெருமான் பங்குனி உத்தர நாளில் இமய மலைக்குச் சென்று பார்வதியைத் திருமணம் செய்துகொண்டதாகக் கூறப்படுகின்றது.

### பங்குனி உத்தரத்தின் தத்துவம்

சிவமும் சக்தியும் எப்போதும் இணைந்துள்ளவை எனும் தத்துவம் உலக இயக்கத்தின் தத்துவம். சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தமை உலகில் துன்பம் அகன்று இன்பம் செழிப்பதைக் குறிக்கிறது. இந்த நாளில் நாள், கோள், முகூர்த்தம் பார்க்காது திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் உள்ளது. சிவசக்தி ஐக்கியம் புனிதத்தன்மைக்கும், உலக வாழ்க்கையின் விருத்திக்கும் எத்துணை முக்கியத்துவம் என்பதனை எமக்கு இந்த நாள் எடுத்துக் காட்டுகிறது.

ஆன்மீக நிலையில் பங்குனி உத்தர கல்யாண விழா பசுவாகிய ஆன்மா பதியாகிய சிவத்துடன் இணைவதான ஓர் உயர் நிலையை எடுத்துக் காட்டுகிறது. சிவசக்தி சங்கமம் ஆன்ம ஈடேற்றத்தைக் குறிப்பதாக உள்ளது. இந்நாளில் விரதமிருந்து இரவில் பாலும் பழமும் உண்பது நியதியாக உள்ளது. இயலாதவர்கள் நண்பகல் ஒரு பொழுது உணவு உண்ணலாம். இலங்கையில் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், பொன்னம்பலவாணேச்சரம் முதலான தலங்களில் பங்குனி உத்தரத் திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

## 2. வைகாசி விசாகம்

வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் பூரணையும் கூடுவதால் வைகாசி விசாகம் சிறப்புப் பெறுகிறது. உலகம் உய்வடையும் பொருட்டுச் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து முருகப்பெருமான் திருஅவதாரம் செய்த தினம் விசாக நாள் ஆகும். இதனால் முருகப் பெருமானுக்கு 'விசாகன்' என்ற பெயரும் உண்டு. இது முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகக் கருதப்படுகிறது. முருகப்பெருமான் அசுரர்களை அழித்து, தேவர்களைக் காத்தார். அவ்வகையில் அதர்மம் ஒழிந்து தர்மம் நிலைநாட்டப்பட்ட தினம் என்று இத்தினம் போற்றப்படுகிறது.

புத்தர் பெருமான் பிறந்ததும், ஞானம் பெற்றதும், பரிநிர்வாணம் அடைந்ததும் வைகாசி விசாக நட்சத்திரத்திலாகும். பௌத்தர்கள் இதனை ஒளி விளக்கேற்றி மிக விசேடமாகக் கொண்டாடுவர்.

### வைகாசி விசாகத்தின் பயன்

சித்திரை, வைகாசி மாதங்கள் இளவேனிற்காலத்தைச்சார்ந்தன. இக்காலத்தில் சைவக் கோயில்களில் விழாக்கள் நடைபெறும். கிராமக் கோயில்களில் கூழ், கஞ்சி ஊற்றலும் தானங்களும் இடம்பெறும். இதன் பொருள் பிறர் வாழ நாம் வாழலாம் என்பதாகும். வைகாசி ஸ்நானம், வைகாசி தானம், வைகாசிக் குளிர்த்தி, வைகாசிப் பொங்கல் என்பன செய்து ஜன்ம பாவங்களை நீக்கலாம்.

### வைகாசி விசாக விரதம்

இத் தினத்தில் பூரண உபவாசம் இருந்து அல்லது பகல் நீங்கியபின் சுவாமி தரிசனம் செய்து நீராகாரத்தை உட்கொள்ளலாம். இந்நாளில் ஆலய தரிசனம், திருமுறை ஓதுதல், புராணம் படித்தல், கேட்டல், சிவதொண்டு செய்தல், சமயப் பிரசங்கம் கேட்டல் போன்ற நற்காரியங்களால் எமது பொழுதை சிவப்பொழுதாக மாற்றுதல் சிறப்பாகும்.

## 3. ஆனி உத்தரம்

ஆனிமாதத்தில்வரும் உத்தரநட்சத்திரமும் விசேடமானது. பங்குனி உத்தரம் சிவபெருமானுடைய திருமணத்தால் விசேடம் பெற்றது போல, ஆனி உத்தரம் சிதம்பர நடராஜர் தரிசனத்தினால் விசேடம் பெற்றது. நடராஜருக்குரிய விசேட

அபிடேக தினங்கள் ஆறில் ஆனி உத்தரமும் ஒன்றாகும். அன்றைய அபிஷேக நிகழ்வை ஆனித் திருமஞ்சனம் என்றும் அழைப்பர்.

## ஆனி உத்தர அபிஷேக விசேடம்

தனது அடியார்களுக்காக இறைவன் தில்லையில் திருநடனம் புரிந்தது இந் நாளிலேயாகும். நடராஜர் இந்த நடனத்தின் மூலம் பஞ்ச கிருத்தியங்களையும் புரிகின்றார். ஆனி உத்தர விழாவன்று சிவபிரானுக்கு பால், தயிர், நெய், தேன், இளநீர், பஞ்சாமிர்தம், விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றால் விசேட அபிஷேகம் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அலங்காரம், பூசை, அர்ச்சனை, தோத்திரம் ஆகியன இடம்பெறும்.

சிவபெருமான் அபிஷேகப் பிரியர். அபிஷேகப் பொருள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நற்பயனை அளிப்பதாகும். அபிஷேக தீர்த்தம் அடியார்க்கு ஆன்மீக நிறைவையும், புனிதத்தையும், நல்லாரோக்கியத்தையும் அருளும். இதுவே அருட் பிரசாதமாகும்.

இத்தினத்தில் நடராஜப்பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக வீதி உலா வருவார். அடியார்கள் இப் புண்ணிய தினத்திலே ஒரு வேளை உணவையேனும் தவிர்த்து விரதமிருந்து சிவதரிசனம் செய்யவேண்டும். இதனால் எம்பெருமானின் இன்னருளைப் பெறலாம். இவ்விரதம் கல்யாணசுந்தர விரதம் என்றும் அழைக்கப்படும். சிதம்பரத்தில் இத்தினத்தன்று சுவாமி வீதி உலா வரும் காட்சி மிகச் சிறப்பானதாகும்.

## பயிற்சி

1. விரதம் அனுட்டிப்பதன் நோக்கம் யாது?
2. விரதம் அனுட்டிக்கும் பொதுவான விதிமுறைகள் யாவை?
3. விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் பயன்கள் ஐந்து கூறுக.
4. பங்குனி உத்தரநாள் சிறப்புப் பெறக் காரணம் யாது?
5. வைகாசி விசாகம் சைவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் எவ்வாறு முக்கியத்துவம் உடையதாக உள்ளது?
6. ஆனி உத்தரம் சிறப்புப் பெறக் காரணம் யாது?

## குழுச் செயற்பாடு

அ) விரதம் பற்றிய ஆறுமுகநாவலரின் வரைவிலக்கணத்தை விளக்கிக் கூறுங்கள்.

ஆ) நடராஜருக்குரிய ஆறு விசேட அபிடேக தினங்கள் பற்றித் தேடியறிந்து சமர்ப்பிக்குக.

# 10 ஆலய வழிபாடு - II



எமது வழிபாட்டு முறைகள் அறிவியல் ரீதியானவை என்றும் உயர்ந்த பயனுடையவை என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விளக்கங்கள் சிலவற்றை இப்பாடத்தில் காண்போம்.

## வழிபாட்டில் அறிவியல்

நாம் ஆலயத்திற்குச் செல்லும்போது நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து செல்வதும், ஆலயத்தினுள்ளே செல்லுமுன் கை, கால் கழுவிச் செல்வதும் நாமும் நமது சூழலும் சுத்தமாக விளங்குவதற்கு அடிப்படைகளாக அமைகின்றன.

ஆலயத்தில் குறைந்தது மூன்று முறை அல்லது ஐந்து முறை வீதியை வலம் வந்து வணங்குதல் வேண்டும் என்பர். இவ்வாறு செய்வதால் எமது பாதத்தின் அடிப்பாகத்தில் இருக்கும், உடலை இயக்கும் நரம்புகளின் முடிச்சுக்கள் தூண்டப்படும்.

மனமும் உடலும் இறுக்கம் நீங்கித் தளர்வடையும். வலப்பக்கமாக வலம் வருவதால் எமது உடலின் ஆறு ஆதார ஸ்தானங்களான மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவற்றில் சமநிலை பேணப்படும்.

ஆலயத்தில் இறைவனை வழிபடும்போது இருகரங்களையும் ஒன்று சேர்த்து (குவித்து) வணங்குவதால் தோள்மூட்டு, முழங்கைமூட்டு, மணிக்கட்டு ஆகியவை பலமடைவதுடன் சீரான இரத்த ஓட்டமும் நடைபெறுகின்றது. பிரபஞ்ச சக்தியும் கூப்பிய விரல்களினூடாக உள்ளீர்க்கப்படுகின்றது.

விநாயகரை வணங்கும்போது கைகளை முஷ்டியாகப் பிடித்து சிரசில் குட்டிக் கும்பிடுவதனாலும், இடது காதை வலது கையினாலும் வலது காதை இடது கையினாலும் பிடித்துத் தோப்புக்கரணம் இடுவதனாலும் சிரசிற்குச் செல்லும் நரம்புகள் தூண்டப்பட்டு சிரசிற்குரிய இரத்த ஓட்டம் சிறப்பாக அமைகின்றது.

அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் என்பன மார்புக்கும் அதன் மேலுள்ள உறுப்புகளுக்கும் சுவாசத்துக்கும் சிறந்த பயிற்சியாக அமையும்.

ஆலயங்களில் தல விருட்சங்களாக அரசு, ஆல், வேம்பு, மா, வன்னி, வில்வம் போன்றவை விளங்குகின்றன. இவற்றை நாம் வலம் வரும்போது அவற்றிலிருந்து வெளியேறும் மூலிகைக்காற்றானது எமது உடலிற்கு மிகுந்த ஆரோக்கியத்தை வழங்குகின்றது.

## கிரியைகளில் அறிவியல்

ஆலயக் கிரியைகளில் ஹோமங்கள் நடைபெறுகின்றன. அவற்றிற்கு அரசு, மா, பலா, ஆல், எருக்கலை போன்ற மூலிகைப்பொருட்கள் இடப்படுகின்றன. இவற்றின் புகையும் கர்ப்பூரம் எரிக்கப்படும் போது வெளிவரும் புகையும் மணமும் சூழலைத் தூய்மையாக்குகின்றன; சுவாசிப்பவர்களுக்கு நோய்தீர்க்கும் மருந்தாகவும் அமைகின்றன.

ஆலயங்கள் பெரும்பாலும் மின்காந்த அலைகள் அதிகம் இருக்கும் இடங்களிலேயே அமைக்கப்படுகின்றன. ஆலயங்களின் விமானங்கள், கோபுரங்கள் என்பவற்றின்மேல் கலசங்கள் அமைக்கப்படுகின்றன. இவை மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியைக் கொண்டுள்ளன. நாம் ஆலயத்தினுட் சென்று வழிபடும்போது இந்த சக்தி நமது உடலிலும் சேர்கின்றது. இதனால் நமக்குப் புத்துணர்வு, உள்ளத்தூய்மை, நோய் எதிர்ப்புச் சக்தி என்பவை கிடைக்கப் பெறுகின்றன.

## பயிற்சி

1. ஆலயத்திற்கு நாம் ஏன் சுத்தமாகச் செல்ல வேண்டும்?
2. ஆலயத்தை வலம் வந்து வணங்குவதால் ஏற்படும் நன்மை யாது?
3. தலவிருட்சத்தின் பயன் யாது?
4. கோபுரங்களில் கலசங்கள் ஏன் அமைக்கப்படுகின்றன?

## குழுச் செயற்பாடு

ஆலய வழிபாட்டிற் காணப்படும் மேலதிக அறிவியல் விடயங்களைத் தேடிப் பெற்று வகுப்பறையில் சமர்ப்பியுங்கள்.

# 11 ஈழத்து ஆலயங்கள்

## அ. விநாயகர் ஆலயம்

### முறிகண்டி விநாயகர் ஆலயம்



முல்லைத்தீவு மாவட்டத்தில், யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு பிள்ளையார் வழித்துணைப் பிள்ளையாராக வீற்றிருக்கிறார். இவ்வாலயத்தைக் கடந்தே, வடபகுதியை அடைய முடியும். எனவே, இவ்வீதியினூடாகப் பயணிக்கும் பயணிகள், இவ்வாலயத்தில் தரித்து நின்று, பிள்ளையாரை வழிபட்ட பின்னரே, தம் பயணத்தைத் தொடருவர்.

மிகச் சிறிய ஆலயத்தில் குடி கொண்டிருக்கும் இவ் விநாயகரின் மகிமையோ பெரிது. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி மிக்கவர். பொங்கல், சோறூட்டல் போன்ற சடங்குகளும் இங்கு நடைபெறுவதுண்டு.

அன்று தொட்டு இன்று வரை சிறியதொரு குடிலினுள்ளேயே இவ்விநாயகர் அமர்ந்துள்ளார். மூன்று வேளை பூசைகள் நடைபெறுகின்றன.

## ஆ. சிவாலயம்

### முன்னேஸ்வரம்



வரலாற்றுப் புகழ்மிக்க இவ்வாலயம், சிலாபம் நகரிற்கு அண்மையில் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையாய் அமைந்த இத்திருத்தலம், அழகேஸ்வரம் எனவும் வழங்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் இறைவன் பெயர் முன்னைநாதர்; இறைவி பெயர் வடிவாம்பிகை; தலவிருட்சம் அரசமரம்; தீர்த்தம் மாயவனாறு (தெதுறு ஓயா).

இராமன், இராவணனைக் கொன்றதால் வந்த பிரம்மஹத்தி தோஷத்தை இவ்வாலயத்தில் வழிபட்டு நீக்கினான் என்று புராண வரலாறு கூறும். அடியார்கள் இவ்வாலயத் தீர்த்தத்தில் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவர்.

இத்தலத்தை இராமன், வியாசர் முதலியோர் வழிபட்டதாகத் தட்சிணகைலாய புராணம் குறிப்பிடுகிறது. குளக்கோட்ட மன்னனும், 6ஆம், 9ஆம் பராக்கிரபாகு மன்னர்களும் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்தும் மானியங்கள் வழங்கியும் தொண்டு செய்துள்ளனர்.

போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலயம் அவர்களால் அழிக்கப்பட்டு, பொருட்களும் சூறையாடப்பட்டன. பிற்காலத்தில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

என்ற மன்னன், இந்தியச் சிற்பிகளைக் கொண்டு ஆலயத்தை மீள அமைத்துக் கும்பாபிஷேகமும் செய்வித்தான்.

இவ்வாலயத்தில் வருடந்தோறும் இரு மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. மகோற்சவ காலத்தில் 63 நாயன்மாருக்கு நடைபெறும் பக்தோற்சவமும், வேட்டைத் திருவிழாவும் சிறப்பானவை. ஏனைய நித்திய, நைமித்திய கிரியைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆலயத்துக்கு உரிய பல தனித்துவமான மரபுகளையும், வரலாறுகளையும் கொண்ட இவ்வாலயம் தமிழ், சிங்கள மக்களின் ஒற்றுமைக்குப் பாலமாகவும், ஈழத்து மக்களின் ஆன்மீக விருத்திக்கு ஆதாரமாகவும் விளங்குகின்றது.

## பயிற்சி

1. முறிகண்டி விநாயகர் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
2. முறிகண்டிப் பிள்ளையாரின் சிறப்பு யாது?
3. முன்னேஸ்வர ஆலயத்தின் இறைவனதும், இறைவியினதும் பெயர்களைக் கூறுக.
4. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் முன்னேஸ்வர ஆலயத்திற்குச் செய்த பணி யாது?
5. இராமருக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்படக் காரணம் யாது?
6. இராமர் அதனை எவ்வாறு நீக்கினார்?

## இ. அம்மன் ஆலயம்

### காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்



இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு, தொன்று தொட்டு வழங்கி வருகிறது. சிங்கள மக்களும், தமிழ் மக்களும் கிராமியத் தெய்வமாகக் கண்ணகியை வழிபடுகிறார்கள்.

இலங்கையில் மட்டக்களப்பிலே கண்ணகியம்மன் வழிபாடு சிறப்புற்றுக் காணப்படுகிறது. காரைதீவுக் கண்ணகியம்மன் ஆலயம் மிகப்பிரசித்தமானது. இன்று இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டு, ஆகம முறையில் பூசைகள் நடாத்தப்பெற்று வந்தாலும், வைகாசி மாதச் சடங்குகள் மரபுரீதியான முறையில் நடாத்தப்படுகின்றன.

வைகாசி மாதத்தில் வரும் பூரணையை அண்மித்த திங்கட்கிழமையில், குளுத்தி பாடி, பக்தர்கள் சடங்கினை நிறைவு செய்வர். இத் திங்கட் கிழமைக்கு முந்திய எட்டு நாட் பூசையும், குளுத்தியுமே கப்புகன்மாரால் நடாத்தப்பெறுகின்றன. இச் சடங்கு காலத்தில் கண்ணகி வழக்குரை காதை படிக்கப்படுவதையும், மக்கள் மிகுந்த பயபக்தியுடன் இருந்து கேட்பதையும் காணமுடியும்.

ஏனைய கோயில்களில் இல்லாத பெரிய உடுக்கு வாத்தியம், இச் சடங்கின்போது இசைக்கப்படுவது சிறப்பம்சமாகும். குளுத்தியன்று மடைபரவி, அனைவருக்கும் கொடுத்தபின் சடங்குகள் நிறைவுக்கு வரும்.

முதலாம் கஜபாகு மன்னனால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகியம்மன் வழிபாடு, சிங்கள மக்களால் பத்தினியம்மன் வழிபாடு என அழைக்கப்படுகிறது.

கண்ணகியம்மனை வழிபட்டால் தீராத நோய்கள் நீங்கும்; வேளாண்மை சிறக்கும்; ஆடு, மாடுகள் பெருகும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. கண்ணகி அம்மன் வழிபாடு இலங்கைவாழ் சைவத் தமிழ் மக்கள் வாழ்வுடன் இணைந்துள்ளது.

## உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம்



புத்தளம் மாவட்டத்தின் உடப்பு எனும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயச் சடங்குகள், நாட்டார் வழிபாட்டு மரபிற்குரியன. இவ் வழிபாடு மகாபாரதக் கதையுடன் தொடர்புபட்டது.

பதினெட்டுத் தினங்களுக்கு இச்சடங்குகள் மேற்கொள்ளப்படும். இத்தினங்களில் ஆலய முன்றலில் மகாபாரதம் தொடர்பான பதினெட்டுச் சம்பவங்கள் நடித்துக்காட்டப்படும். ஆண்டுக்கொரு முறை நடைபெறும் இச் சடங்குகளின்போது, உடப்புக் கிராமமே விழாக்கோலம் பூணும்.

சடங்குகள் பூசாரியினால் ஆற்றுப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் தீமிதிப்புச் சடங்கு மிக விசேடமானது. அடியார்கள் தீமிதித்துத் தம் நேர்த்திகளை நிறைவேற்றுவது பக்திபூர்வமான காட்சியாகும்.

உடுக்கு, பறை போன்ற இசைக்கருவிகள், சடங்குகளின் போது இசைக்கப்படுகின்றன. கரகம்,கும்மி முதலான கலைகள் வளர்க்கப்படும் இடமாகவும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இன்று இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டு, அழகிய கோபுரத்துடன் விளங்குகிறது. ஆகமமுறைப்படி பூசைகள் தினமும் நடைபெற்றாலும் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் சடங்குகளே மிக விசேடமானவை.

## பயிற்சி

1. இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு சிறப்புப் பெற்றுள்ள பிரதேசம் எது?
2. இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
3. உடப்பு திரௌபதையம்மன் ஆலயச் சடங்குகள் எத்தனை தினங்கள் இடம்பெறும்? அவற்றுள் சிறப்பான சடங்கு யாது?
4. உடப்பு திரௌபதையம்மன் ஆலயச் சடங்கின்போது இசைக்கப்படும் இசைக் கருவிகள் யாவை?
5. திரௌபதையம்மன் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடைய இதிகாசம் எது?

## உகந்தை முருகன் ஆலயம்



அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் உன்னஸ்கிரி என்றும் அழைக்கப்படும். சக்திகிரி, வள்ளிகிரி, சந்நியாசிமலை ஆகிய மூன்று குன்றுகளுடன் இயற்கை எழில் கொஞ்சும் வகையில் இவ்வாலயம் தோற்றமளிக்கிறது.

சக்திகிரியில் மூலஸ்தானத்தில் முருகனது திரை காணப்படுகிறது. சந்நியாசி மலை அடிவாரத்தில் விநாயகர் அமர்ந்துள்ளார். வள்ளிமலையில் வள்ளியின் திருவுருவம் உள்ளது. தீர்த்தம் ஏழு சுனைகளாக உள்ளன. இவற்றில் சரவணப் பொய்கை, பாபநாசச் சுனை என்பன முக்கியமானவை.

மகேந்திரபுரியில் சூரன்போரை நிகழ்த்திய பின், திருச்செந்தூர் திரும்பும் வழியில் ''இவ்விடம் எமக்கு உகந்தது'' என்று கூறி, முருகன் தங்கிய இடமாகையால் உகந்தை மலை என அழைக்கப்படுகிறது.

இங்கு பிரசாதமாக அவல் வழங்கப்படுகிறது. ஏழு சுனைகளிலும் நீராடி, ஏழு ஜென்ம பாவங்களையும் அடியார்கள் நீக்குவர்.

ஆலயத்துக்குச் செல்லும் வழியில் இரு மருங்கிலும் சித்தர்களின் சமாதிகள் பல காணப்படுகின்றன. வள்ளிகிரியை அண்மித்ததாகக் கடல் காணப்படுகிறது. கடலினது இரைச்சல், வள்ளிக்குத் துன்பம் தராதிருக்க கடலரசனை அமைதியாக இருக்கும்படி முருகன் கூறியதால், கடல் அமைதியாகக் காணப்படுகிறது என்பது ஐதீகம்.

முருகனும் வள்ளியும் கதிர்காமத்திலிருந்து பயணஞ்செய்து வந்த தங்கத் தோணி, கடலோரத்தில், கல்லுருவாகிக் கவிழ்ந்து காணப்படுகிறது. முருகனும் வள்ளியும் தங்கி ஓடியாடி விளையாடிய தடங்கள், வள்ளி மஞ்சள் தேய்த்துக் குளித்த தடங்கள் என்று பல தடயங்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் கதிர்காமத் திருவிழாவுடன் தொடர்புடையது. கதிர்காம யாத்திரை வரும் அடியார்கள் உகந்தை முருகன் ஆலயத்தில் தங்கிச் செல்வது வழமை.

## கதிர்காமம்



தென் இலங்கையில் மொனராகலை மாவட்டத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இது மிகவும் புராதனமான பாத யாத்திரைத் தலமாக உள்ளது. இவ்வாலயம் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது.

எல்லாள மன்னனைப் போரில் வென்ற துட்டகைமுனு மன்னன், இவ்வாலயத்தில் தன் நேர்த்திக் கடனை நிறைவேற்றியதாக 'மகாவம்சம்' எனும் வரலாற்று நூல் கூறுகிறது.

இவ்வாலயத்தின் கருவறை திரையால் மூடப்பட்டுக் காணப்படும். பூசாரியைத் தவிர வேறு யாரும் உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பூசாரி பக்தி சிரத்தையுடன் வாய்கட்டிப் பூசை செய்வார். திருவிழாக் காலங்களில் உள்ளிருக்கும் யந்திரத் தகட்டை, வெள்ளைத் துணியால் மூடி பேழையொன்றில் வைத்து யானைமீது ஊர்வலமாக எடுத்துச் செல்வர்.

இங்கு பிள்ளையார், தெய்வயானை, வள்ளி ஆகியோருக்குத் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. தீர்த்தம் மாணிக்க கங்கை. வருடாந்த உற்சவம் ஆடி மாதத்தில் இடம் பெறும்.

கதிர்காம ஆலயத்திற்குச் செல்பவர்கள் செல்லக்கதிர்காமத்திற்கும் சென்றுவருவது வழமையாகும். அடியார்கள் தங்குவதற்குப் பல மடங்களும் இங்கு உள்ளன.

கதிரமலையைச் சூழ பல சித்தர்களின் குகைகளும், சமாதிக் கோயில்களும் அமைந்துள்ளன. கதிர்காமத்தில் அநேகர் கற்பூரச்சட்டி எடுத்து தம் நேர்த்திகளை நிறைவேற்றுவர். இதனால் இம்முருகனைக் கற்பூரக்கந்தன் என்றும் அழைப்பர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் கதிர்காமத் தலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். நம் நாட்டைச் சேர்ந்த நவாலியூர் சோமசுந்தரப் புலவரும்,

‘கதிரமலை காணாத கண் என்ன கண்ணே
கற்பூர ஒளி காணாக் கண் என்ன கண்ணே’

எனப் பாடியுள்ளார்.

## உ. விஷ்ணு ஆலயம்

### வல்லிபுர ஆழ்வார் ஆலயம்



யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறைக்கு அண்மித்ததாக இவ்வாலயம் உள்ளது. ஏனைய விஷ்ணு ஆலயங்களில் மூல மூர்த்தியாகத் திருமால் நின்ற கோலத்திலோ, பள்ளி கொள்ளும் கோலத்திலோ காணப்படுவார். இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் விஷ்ணுவின் சுதர்சன சக்கரம் காணப்படுகிறது இது பஞ்சலோகத்தாலானது.

இங்கு சக்கரத்தைத் தாபித்து வழிபடுவதற்குக் காரணமான செவிவழிக் கதையொன்று உள்ளது. பாரத நாட்டில் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இலவல்லி எனும் பெண், புத்திரப் பேறற்று வருந்தினாள். அவள் சிவனை நோக்கித் தவஞ் செய்தாள். சிவன் அவள் முன் தோன்றி ''நீ ஈழநாட்டில் பிறப்பாய்; அங்கு திருமால் உன்னை ஆட்கொண்டு குழந்தைப் பேற்றினைத் தந்தருள்வார்'' என்று கூறி மறைந்தார்.

பின் இலவல்லி, பருத்தித்துறைப் பகுதியில் வல்லிபுரம் எனுமிடத்தில் பிறந்து வளர்ந்து, திருமணமாகி திருமாலை வழிபட்டு வந்தாள். அக்காலப் பகுதியில் விஷ்ணு மீனாகத் தோன்றி கடலில் மீனவர்களுக்குப் பெருந்தொல்லை கொடுத்து வந்தார். ஒரு நாள் இலவல்லி இயற்கையை இரசிக்க விரும்பிப்

படகிலேறிக் கடலில் சிறிது தூரம் சென்றாள். அவ்வேளை கடலில் இருந்த மீனொன்று அவள் மடியில் பாய்ந்து குழந்தையாக மாறியது. கைகளில் சங்கு சக்கரத்துடன் தோன்றிய அக்குழந்தையைப் பார்த்தவுடன் இலவல்லி தன் பூர்வீக பலனை நினைந்து மகிழ்ந்தாள்.

இறுதியில் அம்மீன், சக்கரத்தை இலவல்லிக்கு அளித்துவிட்டு மறைந்தது. இலவல்லி தன்முன்னே மீனாகவும் குழந்தையாகவும் காட்சியளித்த மாயவன் அருளிய சக்கரத்தை வல்லிபுரத்துக்குக் கொண்டு வந்து ஆலயம் அமைத்து அதனை நிறுவி வழிபட்டு வந்தாள் என்பது ஐதீகம்.

இவ்வாலயத்தின் நான்கு திசைகளிலும், நான்கு திருவாசல்கள் உள்ளன. கிழக்கு வாசலில் இராஜகோபுரம் அமைந்துள்ளது. மகா மண்டபத்தில் தெற்கு நோக்கியபடி பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதராக விஷ்ணு வீற்றிருக்கிறார்.

இங்கு தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. நைமித்திய கிரியைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. புரட்டாதிமாத அமாவாசையில் தொடங்கும் மகோற்சவம் பதினேழு தினங்கள் நடைபெறும். 16 ஆம் நாள் நடைபெறும் சமுத்திரத் தீர்த்தம் மிக விசேடமானது.

## பயிற்சி

1. உகந்தை முருகனாலயத்திற்கு அப்பெயர் ஏற்படக் காரணம் யாது?

2. கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பூசை செய்பவர் யார்?

3. கதிர்காமத்தில் பூசை எவ்வாறு நடைபெறும்?

4. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூலமூர்த்தி யாது?

5. வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்தில் விசேடமாக நடைபெறும் திருவிழா யாது?

## குழுச் செயற்பாடு

அ. உங்களுக்கு அண்மையிலுள்ள ஆலயத்திற்குச் சென்று, அதன் வரலாற்றைக் கேட்டறியுங்கள்; சுருக்கமாக எழுதுங்கள்; வகுப்பறையில் முன்வையுங்கள்.

ஆ. அருணகிரிநாதர் கதிர்காமக் கந்தனைப் போற்றிப் பாடிய திருப்புகழ் ஒன்றை மனனஞ்செய்து ஒப்புவியுங்கள்.

# 12 உபநிடத சிந்தனைகள்

எமது சமயத்தின் முதல் நூல்கள் வேதங்களும், ஆகமங்களுமாகும். வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நால்வகைப்படும். நால் வேதங்களும் முறையே சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் எனும் பிரிவுகளை உடையன.

| | |
|---|---|
| சங்கிதைகள் பிராமணங்கள் | கர்ம காண்டம் (செயலுக்குரிய பகுதி) |
| ஆரணியகங்கள் | உபாசனா காண்டம் (வழிபாட்டுக்குரிய பகுதி) |
| உபநிடதங்கள் | ஞான காண்டம் (அறிவுக்குரிய பகுதி) |

வேதங்களின் சாரமாக விளங்குவது உபநிடதங்களேயாம். அதனால் அவற்றை **வேதசிரசு** என்றும் **வேதாந்தம்** என்றும் அழைப்பர். வேதத்தை அடர்ந்து பெருத்து வளர்ந்ததொரு மரமாகக் கருதினால், அதன் பழுத்த கனிகளாக உபநிடதங்களைக் கொள்ளலாம். இவை எமது சமய சிந்தனையின் சிகரமாக விளங்குகின்றன.

***"பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே***
***பார்மிசை ஏதொரு நூலது போலே"***

என்று மகாகவி பாரதியார் அவற்றைப் போற்றிப் பாடியுள்ளார்.

எமது பழைய கல்வி முறை குருகுலக் கல்வி முறையாக அமைந்திருந்தது. மாணவர்கள் குருவோடு பல்லாண்டுகள் சேர்ந்து வாழ்ந்து பெற்ற கல்வியின் அனுபவக் குறிப்புகளாக இந்த உபநிடதங்கள் விளங்குகின்றன. உபநிடதம் என்றால் 'அருகிலிருந்து கேட்டல்' எனப் பொருள்படும்.

உபநிடதங்களின் மூல நூல்கள் வடமொழியில் உள்ளதால், அநேகர் இவை பற்றி அறியாமல் உள்ளனர். பிரபஞ்சம் பற்றிய விளக்கங்கள், பிரம்மத்தின் இயல்புகள், சீவான்மாக்களின் இயல்புகள், பிரம்மத்தை எவ்வாறு அறிவது, அடைவது என்பன போன்றவற்றை உபநிடதங்கள் விளக்குகின்றன.

கடோபநிடதம், பிருகதாரணிய உபநிடதம், சுவேதாஸ்வதர உபநிடதம், கேநோபநிடதம், ஐதரேய உபநிடதம், மைத்ரீ உபநிடதம் என உபநிடதங்கள் பல. இங்கு நாம் சுவேதாஸ்வதர உபநிடதம் பற்றி நோக்குவோம்.

## சுவேதாஸ்வதர உபநிதடம்

இந்த உபநிடதம் யசுர் வேதத்தைச் சார்ந்தது. சுவேதாஸ்வதர முனிவர், தனது சீடர்களுக்கு இறைவனைப் பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார்.

- உயிர்கள் அனைத்திலும் இறைவன் வாழ்கிறான்.
- இறைவன் பிறப்பு இறப்பைக் கடந்தவன்.
- ஆனால் உயிர்களோ பிறப்பு - இறப்பு எனும் சுழற்சிக்கு உட்படுவன.
- பாலில் வெண்ணெய் போல இறைவன், எங்கும் பரந்து காணப்படுகின்றான்.
- அவனை அறிய, தியானம் செய்தல் வேண்டும்.
- 'ஓம்' எனும் பிரணவ மந்திரம், தியானம் என்பன இறைவனை உணர உதவும்.
- இறைவனை அறிந்தோர், மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவர்.

இவ்வாறான உபநிடதக் கருத்துக்கள் எமது ஈடேற்றத்திற்கு வழிவகுப்பன. எமது சமயத்தின் தொன்மையைப் புலப்படுத்துவன. அவற்றை அறிந்து வாழ்வில் உய்வடைவோம்.

## பயிற்சி

1. எமது சமயத்தின் முதல் நூல்கள் எவை?

2. நான்கு வேதங்களும் எவை?

3. வேதங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?

3. உபநிடதம் என்றால் என்ன?

4. உபநிடதங்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

5. இறைவன் பற்றி சுவேதாஸ்வதர உபநிதடம் கூறும் விடயங்கள் மூன்று தருக.

## குழுச் செயற்பாடு

'எமது சமயத்தின் முதல்நூல்கள்' என்ற தலைப்பில் சிறு பேச்சு ஒன்றை நிகழ்த்துங்கள்.

# 13 சுந்தரர் தேவாரம்



## அ.தேவாரம் - 1

சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பெற்றோர் நிச்சயித்திருந்த திருமணத்தைச் சிவபெருமான் நிகழாமல் தடுத்து அவரை ஆட்கொண்டருளினார். அதன் பின்னர் நாயனார், கோயில் தோறும் சென்று சிவபெருமானைப் பாடிப் பரவி வந்தார். திருவாரூரிலே பரவையாரைத் திருமணஞ் செய்து, இல்லறத்தில் ஒழுகும் நிலையை சிவபெருமான் அவருக்கு வழங்கினார்.

இவர்களின் இல்வாழ்க்கைக்கு வேண்டிய நெல் முதலியவற்றைக் குண்டையூர்க்கிழார் என்னும் செல்வர் அனுப்பிவந்தார். ஒருகாலத்தில் மழைவளம் சுருங்கியது. எனவே சுந்தரருக்கு அனுப்புவதற்கு அந்தச் செல்வரிடம் போதிய நெல் இருக்கவில்லை. அப்போது செல்வர் இறைவனை வேண்டியதனாற் குண்டையூர் முழுவதும் நெல் மலையாகக் குவிந்தது. இதனை மனிதரால் எடுத்துச் செல்ல முடியாது.குண்டையூர்க்கிழார் சுந்தரரிடம் சென்று இச்செய்தியை அறிவித்தார்.

சுந்தரர் குண்டையூருக்கு அருகில் இருந்த திருக்கோளிலி எனும் தலத்துக்குச் சென்று பதிகம் பாடினார். அதில் அமைந்த முதற்பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

***தலம் - திருக்கோளிலி*** ***பண் - நட்டராகம்***

***திருச்சிற்றம்பலம்***

***நீள நினைந்து அடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்***
***வாள் அன கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே***
***கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்***
***ஆள் இலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே.***



***திருச்சிற்றம்பலம்***

## *பொழிப்பு*

திருக்கோளிலி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய எம்பெருமானே! நான் எப்போதும் உம்மை நினைத்து, கைகூப்பிக் கும்பிடும் அடியவன். வாள் போலக் கூர்மையான கண்கள் உள்ள பரவையார் மனச் சோர்வும் உடல் வருத்தமும் அடையாமல் வாழ வேண்டும் என்பதற்காகக் குண்டையூரில் கொஞ்சம் நெல்லைப் பெற்றுள்ளேன். ஆயினும் அந்த நெல்லைக் குண்டையூரிலிருந்து பரவையாரின் மாளிகைக்குக் கொண்டு வர உதவியாள் யாரும் கிடைக்கவில்லை. அந்த நெல்லைக் கொண்டு செல்வதற்கு அருள் புரிவீராக.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| நித்தலும் | - | தினமும்/எப்போதும் |
| நீள | - | தொடர்ந்து |

## பயிற்சி

*1. இத்தேவாரம் சுந்தரரால் எச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?*

*2. 'வாளன கண்மடவாள்' என்ற தொடர் யாரைக் குறிப்பிடுகிறது?*

*3. சுந்தரருக்கும், இறைவனுக்கும் இடையிலான உறவு இப்பாடலினூடாக எவ்வாறு புலப்படுகிறது?*

### ஆ.தேவாரம் - 2

திருவாரூர்க் கோயிலின் முன் ஆயிரங்கால் மண்டபம் ஒன்று உள்ளது. அது தேவாசிரியன் மண்டபம் எனப்படும். சுந்தரமூர்த்தி நாயனார் அங்கு கூடியிருந்த சிவனடியார்களை வணங்கித் தாம் அவர்கள் எல்லோருக்கும் அடியவன் என்று கூறினார். அவர்களைப் போற்றித் திருப்பதிகம் ஒன்று பாடினார். அதுவே திருத்தொண்டத் தொகை எனப்படும். அதிலே தம்மைத் தவிர்த்து அறுபத்திரண்டு தனியடியார்களைப் பெயர் கூறியும் ஒன்பது தொகையடியார்களைப் பெயர் குறியாமல் பொதுவாகவும் பாடியுள்ளார். அடியார்கள் பற்றிப் பாடப்பட்ட முதல் நூல் இதுவாகும். இதனை அடிப்படையாக கொண்டு சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடினார்.

தில்லைவாழ் அந்தணர், அப்பாலும் அடிசார்ந்தார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், முழுநீறுபூசிய முனிவர் முதலானோர் தொகையடியார்கள். இங்கு, திருத்தொண்டத் தொகைப் பதிகத்தில் முதலாவது தேவாரம் தரப்பட்டுள்ளது.

## திருத்தொண்டத்தொகை

**தலம் - திருவாரூர்** *திருச்சிற்றம்பலம்* **பண் - கொல்லிக்கௌவாணம்**

***தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்***
***திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்***
***இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்***
***இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்***
***வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்***
***விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்***
***அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்***
***ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.***



*திருச்சிற்றம்பலம்*

### பொழிப்பு

தில்லை நடராசப்பெருமானின் அடியார்களாகிய தில்லைப்பதி வாழ் அந்தணர்களுக்கும் அடியேனாவேன். குயவர் குலத்தவரான திருநீலகண்ட நாயனாருக்கும் அடியேன். சிவனடியார்களுக்கு எதனையும் இல்லை என்று கூறாத இயற்பகை நாயனாருக்கும் அடியேன். இளையான் குடிமாறன் அடியாருக்கும் அடியேன். வெற்றி பெறுவதில் மிக வல்லவரான மெய்ப்பொருள் நாயனாருக்கும் அடியேன். பெருஞ் சோலைகள் சூழ்ந்த திருச்செங்குன்றூரவரான விறன்மிண்ட நாயனாருக்கும் அடியேன். அல்லிப்பூவும் மென்மையான முல்லைப்பூவும் கலந்துகட்டிய மாலை அணிந்த அமர்நீதி நாயனாருக்கும் அடியேன். அத்தகைய ஆரூரனாகிய அடியேன் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டவனாவேன்.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| பொழில் | - | சோலை |
| ஆரூரன் | - | சுந்தரர், நம்பியாரூரர் |

## பயிற்சி

1. இப்பாடல் பாடப்பெற்ற சந்தர்ப்பத்தைத் தருக.
2. இப் பாடலில் இடம்பெற்றுள்ள நாயன்மார்கள் யாவர்?
3. அவர்களைச் சிறப்பித்துக் கூறும் அடைமொழிகளைக் குறிப்பிடுக.
4. அடியார்கள் பற்றிப் பாடப்பெற்ற முதல்நூல் யாது? அதைப் பாடியவர் யார்?

## குழுச் செயற்பாடு

வகுப்பறையில் தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.

# 14 திருமுறைகளில் புராண இதிகாசக் கருத்துக்கள்

தெய்வீக உணர்வு பெருகவும் சமய ஒழுக்கத்தைப் பேணவும் தொகுக்கப்பட்ட நூல்களின் தொகுதி திருமுறைகள் ஆகும்.

இராஜராஜ சோழ மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க, நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்த வரலாற்றை ஏழாம் தரத்தில் கற்றுள்ளீர்கள். இங்கு நாம் திருமுறைகளிற் காணப்படும் சில புராண இதிகாசக் கதைகளை அறிந்து கொள்வோம்.

வேத, ஆகம வரிசையில் அடுத்துத் தோன்றியவை புராண இதிகாசங் களாகும். அடியார்களின் சிவ பக்திச் செயல்கள் இறைவனது திருவருட் சிறப்பு போன்றவற்றைக் கதை வடிவில் கூறும் பழமையான நூல் புராணம் ஆகும். பதினெண் புராணங்களில் பத்து சிவபுராணங்கள் ஆகும். இப் புராணக் கதைகள் சிவபக்தியையும், சிவனது வீரதீரச் செயல்கள், அருட்டிறன், தனித்துவம், மேன்மை என்பவற்றையும் புலப்படுத்துவனவாகும்.

நாயன்மார், புராண இதிகாசக் கதைகளைத் திருமுறைகளில் பாடி தமிழ் நாட்டில் சைவத்தின் தொன்மையையும், மேன்மையையும் எடுத்துரைத்தனர். அவற்றை மக்களிடம் பரப்பினர்.

திருமுறைப் பாடல்களில் சிவன் நஞ்சுண்டமை, கங்கையைச் சடையில் தரித்தமை, யமனை உதைத்தமை, திரிபுரம் எரித்தமை, மன்மதனை எரித்தமை முதலான புராணக் கதைகள் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

## சிவன் நஞ்சுண்டமை :



சம்பந்தரின் 'வேயுறு தோளிபங்கன்', 'இடரினும் தளரினும்' எனத் தொடங்கும் தேவாரப் பாடல்களிலும், சுந்தரரின் 'ஆலந்தானுகந்து' எனத் தொடங்கும் தேவாரப் பாடலிலும் இறைவன் நஞ்சுண்ட புராணக்கதை எடுத்தாளப்பட்டுள்ளது.

'வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்' எனும் அடியும், 'கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை மிடறினில் அடக்கிய வேதியனே' எனும் அடியும், 'ஆலந்தானுகந்து அமுது செய்தானை' எனும் அடியும் இச் சம்பவத்தை எடுத்துரைப்பனவாகும்.

அழிவில்லாப் பெருவாழ்வு பெற விரும்பிய தேவர்கள், அசுரர்களின் உதவியுடன் பாற்கடலைக் கடையத் தொடங்கினர். மந்தரமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு முழுப் பலத்துடன் இருசாராரும் கடைந்தனர். அதனால் துன்புற்றுத் திணறிய வாசுகிப்பாம்பு, தன்னுள் இருந்த நஞ்சைக் கக்கியது. அந்த நஞ்சின் கோரத்தை எவராலும் தாங்க முடியவில்லை. அனைவரும் சிவபெருமானிடம் சென்று தம்மைக் காத்தருளுமாறு வேண்டினர். சிவன் ஆலகாலம் என்ற அந்த நஞ்சை எடுத்து உண்ண, அது அவரது கண்டத்திலே தங்கியது. அதனால் சிவன் ஆலமுண்டகண்டன், விடமுண்டகண்டன் என்ற பெயர்களாற் போற்றப்படுகிறார்.

இவ்வாறே, சுந்தரரின் 'ஆலந்தானுகந்து' எனத் தொடங்கும் தேவாரப் பாடலில் இறைவன் யமனை உதைத்த கதை 'கால காலனைக் கம்பன் எம்மானை' என்னும் பாடல் வரி மூலம் கூறப்பட்டுள்ளது. சம்பந்தரின் 'வேயுறு தோளி பங்கன்'

எனத் தொடங்கும் தேவாரத்தில் இறைவன் கங்கையைச் சடையில் தரித்த புராணக் கதை 'மாசறு திங்கள் கங்கை முடி மேலணிந்து' எனும் அடியில் எடுத்தாளப்பட்டுள்ளது.

## சிவன் இராவணனது கர்வம் அடக்கியமை:



இறைவன் தன்னிலையில் இருந்து படியிறங்கி, பல்வேறு வடிவங்கள் எடுத்து பக்தர்களுக்கு அருள் புரிந்த சம்பவங்களைக் கதை வடிவில் கூறுவனவே இதிகாசங்கள் ஆகும். மகாபாரதமும் இராமாயணமும் இதிகாசங்களாவன. சிவன், இராவணனுக்கு அருள் புரிந்தமையை இராமாயணத்தினூடாக நாம் அறியலாம்.

நாயன்மார் தமது பாடல்களிற் புராணக் கதைகளை மட்டுமன்றி இதிகாசக் கதைகளையும் கையாண்டுள்ளனர். சம்பந்தரின் ''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் ஏத்திட ஆத்தமாம் பேறு தொடுத்தவர்'' என்ற தேவாரப் பாடலில் இறைவன் இராவணனது கர்வத்தை அடக்கி அருள்புரிந்த இதிகாசக்கதை குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருமுறை இராவணன் புஷ்பக விமானத்திலேறி, ஆகாயமார்க்கமாகச் சென்றான். வழியில் கயிலைமலை தடையாக இருப்பதை உணர்ந்து, அதனைப் பெயர்த்தெடுக்க முயன்றான். அப்பொழுது சிவபெருமான் தமது திருவடிப் பெருவிரலினால் மலையை ஊன்றி, இராவணனை நசித்து அவனது கர்வத்தை அடக்கினார். சிவபக்தனான அவன், இறைவன் சாமவேதப்பிரியன் என்பதை உணர்ந்து, சாமகானத்தை இனிமையாகப் பாடினான். இறைவன் மனமகிழ்ந்து, இராவணனுக்கு மந்திரவாளும் பிற வரங்களும் கொடுத்தருளினார்.

இப் புராண இதிகாசக் கதைகள் இறைவனின் மகிமையையும் அவரது பேரருட் குணங்களையும் எடுத்துக் காட்டுவன. வெறும் கதைகளாக நாம் அவற்றை நோக்காது இவற்றின் மூலம் இறைவனின் தெய்வீகக் குணங்களை அறிந்து எமது வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**புராணம்** - பழமையானது

**இதிகாசம்** - இது இவ்வாறு நடந்தது


## பயிற்சி

1. புராணம் என்றால் என்ன? இதிகாசம் என்றால் என்ன?
2. புராணக் கதைகள் எவற்றைக் கூறுகின்றன?
3. 'விடமுண்ட கண்டன்' என்ற வரிகளுடன் தொடர்புடைய புராணக் கதையைச் சுருக்கமாக எழுதுக.
4. இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்றதன் காரணம் யாது?
5. சிவபெருமான் இராவணனின் கர்வத்தை எவ்வாறு அடக்கினார்?
6. இராவணன் சாமகானம் பாடியதன் காரணம் யாது?
7. சாமகானம் பாடிய இராவணனுக்கு இறைவன் எவற்றை வழங்கினார்?

## குழுச் செயற்பாடு

இறைவன் கங்கையைச் சடையில் தரித்த புராணக் கதையையும், இறைவன் யமனை உதைத்த புராணக் கதையையும் தேடியறிந்து எழுதுங்கள். அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

# 15 சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார்



பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சைவசமயத்தை அழிவிலிருந்து காப்பாற்றியதுடன் சைவம் வளரவும் தொண்டாற்றிய பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களையே சாரும். நாவலர் பெருமானுக்குப் பின்னர் அவர் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றுவதில் முன்னின்று உழைத்தவர்களுள் ஒருவராக சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் வாழ்ந்துள்ளார்.

அவர் பருத்தித்துறையில் உள்ள புலோலியைச் சேர்ந்த சுப்பிரமணியபிள்ளை என்பவருக்கும் வள்ளியம்மைக்கும் இளைய புதல்வராக 1878 ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான அவர், பரமேஸ்வராக் கல்லூரியிலே ஆசிரியராகவும் பின்னர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உப அதிபராகவும் கடமையாற்றினார். அக்காலத் திலேதான் அவர் சைவப்பணியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

பெரியாரிடம் சைவ விழுமியங்களை வற்புறுத்தப் போதிய ஆளுமையிருந்தது. அவரது தோற்றப் பொலிவும் நடத்தையும் அறிவும் அதனை எடுத்துக் காட்டின. தம் வாழ்க்கையாலே அடுத்தவரையும் வாழச் செய்தவர் அவர்; பெரியார் பேராசான், சிறந்த நிர்வாகி, தலை சிறந்த கல்விமான்.

அவர் குரு சீட முறையிலும் தமது கற்பித்தலை மேற்கொண்டார். பாடசாலையிலும் வாழ்க்கையிலும் மாணவர் ஒழுக்கத்துடனும் சைவ ஆசாரத்துடனும்

நடக்கவேண்டுமென வற்புறுத்தினார். சிவபாதசுந்தரனாரின் வழிகாட்டலில் மாணவர்கள் உயரிய விழுமியங்களைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

மேனாட்டாரது பழக்கவழக்கங்களால் எமது சைவப் பண்பாடு அழிவுறுவதைக் கண்டு வருந்தினார். மதமாற்றத்தைத் தீவிரமாகக் கண்டித்தார். சைவர் தமது பண்பாட்டைப் பின்பற்றப் பலவழிகளிற் பணியாற்றினார். அவர் நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டார்.

இந்துபோட் எனப்படும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து (1928 - 1930) பல பணிகளை ஆற்றினார். திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் தலைவராக இருந்து (1948 - 1953) ஆலயத்தைப் புனருத்தாரணஞ் செய்து 1952 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். அடியவர்கள் தங்குவதற்கென திருஞானசம்பந்தர் மடத்தையும் கட்டுவித்தார்.

ஆலயங்களிலே நடைபெறுகிற மிருகபலியை எதிர்த்து சமய சீர்திருத்த வாதியாகவும் விளங்கினார். சைவ மாணவர்களுக்கென சைவபோதம் முதற் புத்தகம், சைவபோதம் இரண்டாம் புத்தகம் என்பவற்றையும் திருவருட்பயனுக்கு உரையும் எழுதினார். மேலும் சுப்பிரமணியப் பெருமானுடைய திருப்பெருவடிவம், சைவசமயசாரம், சைவக்கிரியை விளக்கம், கந்தபுராண விளக்கம், அப்பர் சுவாமிகளின் தேவாரச் சிறப்பு, சைவ மகத்துவம், ஆறுமுகநாவலர், இந்து சமயத்திற் சைவம், சிவஞான போதத்தின் சுருக்கம், கிறிஸ்தவ விமர்சகருக்குப் பதில் முதலான நூல்களும் அவரால் எழுதப்பட்டன.

சைவப்பெரியாருடைய பணிகள் நிலைபெற அவருடைய மாணவர்களும் அன்பர்களும் இலங்கை, இந்தியா, மலேசியா முதலான நாடுகளிலிருந்து பணியாற்றினர். இவ்வாறு சைவத்தமிழ்ப் பண்பாடு பரவப் பல வகையிலும் தமது வாழ்வை அர்ப்பணித்த பெரியார் 1953 ஆம் ஆண்டில் இறையடி சேர்ந்தார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியது போன்று, பெரியார் அவர்களது வாழ்க்கை சமய வாழ்க்கையாகும். அவரின் ஒவ்வொரு மூச்சும் சைவமூச்சாகும்.

## பயிற்சி

1. சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாருக்கு முன்னோடியாக விளங்கியவர் யார்?
2. சைவப் பெரியார் எந்த மொழிகளில் புலமை பெற்றிருந்தார்?
3. சிவபாதசுந்தரனார் ஆற்றிய பணிகள் பற்றி விபரிக்குக.
4. சைவப்பெரியார் எழுதிய நூல்களுள் ஐந்தைக் குறிப்பிடுக.
5. ‘சைவப்பெரியார் அவர்களது வாழ்க்கை சமய வாழ்க்கையாகும்’ என்று பண்டிதமணி அவர்கள் கூறக் காரணம் யாது?

## குழுச் செயற்பாடு

சைவப்பெரியார் பற்றிய முக்கிய கருத்துக்களை வினாவிடை வடிவமாகத் தயாரித்து வகுப்பறையில் சமர்ப்பியுங்கள்.

# 16

# மக்கள் சேவையே மகேசன் சேவை



*திருச்சிற்றம்பலம்*

***பூழியர் கோன் வெப்புஒழித்த புகலியர்கோன் கழல் போற்றி***
***ஆழி மிசைக் கன்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி***
***வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி***
***ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி போற்றி.***

*திருச்சிற்றம்பலம்*

சைவசமய குரவர்கள் என்று போற்றப்படும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் நால்வரும் சித்தத்தைச் சிவன்பால் வைத்த அடியவர்கள். இறைவனைத் தந்தையாக, ஆண்டானாக, தோழனாக, ஞானாசிரியனாகத் தரிசித்து முத்தியின்பம் எய்தியவர்கள். சைவசமயிகள் வாழவேண்டிய நெறிமுறைகளை வாழ்ந்து காட்டியவர்கள். மக்களுக்குச் செய்யும் பணி இறைவனாகிய மகேசனுக்குப் புரியும் பூசைக்கு நிகரானது என்பதனை இவர்கள் ஒவ்வொருவரும் நமக்கு உணர்த்தியுள்ளனர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

சோழவள நாட்டில் சீர்காழிப்பதியிலே சிவபாதவிருதயருக்கும் பகவதியாருக்கும் பிள்ளையாக அவதரித்த ஞானக்குழந்தையே திருஞானசம்பந்தர். மூன்று வயதில் அம்மையப்பரால் ஆட்கொள்ளப்பட்ட இப்பெருமான் மக்கள் நன்மைக்காக நிகழ்த்திய அற்புதங்கள் பல.

### அ) பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியமை

திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றமை முதலான சம்பந்தரது அற்புதங்களை மக்கள் கேள்வியுற்றனர். சம்பந்தரின் தாயாரின் ஊரான திருநனிபள்ளி வாசிகள் அவரைத் தமது ஊருக்கு அழைத்தனர். ஞானப்பாலுண்டு ஞானத்தமிழ் பாடும் பிள்ளையை மங்கலவாத்தியங்கள் முழங்க மக்கள் அன்போடு வரவேற்றனர். திருநனிபள்ளிப் பெருமானைத் துதித்துச் சம்பந்தப் பெருமான் பதிகம் பாடியருளினார்.

திருநனிபள்ளி மக்களின் குறைகளைச் செவிமடுத்த ஞானசம்பந்தர் அவ்வூர் பாலைநிலமாக வளமற்றிருந்தமையை அறிந்து வருந்தினார். அந்த நிலத்தை நெய்தல் நிலமாக்குமாறு மக்கள் அவரை வேண்டிநின்றனர்.

சம்பந்தர் சிவனை வணங்கி ‘காரைகள் கூகை முல்லை’ என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார். பாலை நிலம் நெய்தல் நிலமானது. ஒவ்வொரு

பாடலும் முதலிரு அடிகளில் பாலை நிலக் காட்சியையும் இறுதி இரு அடிகளில் மருதத்தோடு கூடிய நெய்தல் காட்சியையும் கொண்டதாக அப்பதிகம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஆ) குளிர்ச்சுரம் நீக்கியமை

சம்பந்தப்பெருமான் ஒருமுறை திருக்கொடிமாடச்செங்குன்றூரை அடைந்து சிவபெருமானை வணங்கியிருந்தார். அப்போது பனிக்காலம். சம்பந்தப் பெருமானுடன் வந்த அடியவர்களை பனிச்சுரம் வருத்த ஆரம்பித்தது.

'அவ்வினைக் கிவ்வினை' என்று தொடங்கும் திருநீலகண்டப் பதிகத்தைப் பாடியருளினார். ஒவ்வொரு பாடலின் இறுதியும் 'தீவினை தீண்டப் பெறா' என்று அமைந்தது. கொங்குநாடெங்கும் பனிச்சுரம் தீர்ந்தது.

## திருநாவுக்கரசு நாயனார்

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த அடியார் திருநாவுக்கரசு நாயனார் ஆவார். இவரது இயற்பெயர் மருணீக்கியார். இளம் வயதிலேயே கல்வி, கேள்விகளிற் சிறந்து விளங்கிய மருணீக்கியார், சமண சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டு அச்சமயத்துக்கு மாறினார். தருமசேனர் என்னும் பெயரையும் பெற்றார். இவருடைய தமக்கையார் திலகவதியார் தமது தம்பியாரை மீண்டும் சைவ சமயத்தவராக்குமாறு சிவ பெருமானைப் பணிந்தார். இறைவனும் மருணீக்கியாருக்கு சூலைநோயைக் கொடுத்தருளினார். நோயின் கொடுமை தாங்காத மருணீக்கியார் திருவதிகை வீரட்டானேச்சுவரரைப் பணிந்தார். 'கூற்றாயினவாறு....' எனத் தொடங்கும் பதிகத்தை மெய்யன்போடு பாடித் துதித்தார். சூலைநோய் மறைந்தது. அன்றிலிருந்து தலம் தோறும் சென்று இறைவனை இன்தமிழ்ப் பதிகங்கள் பாடி வழிபட்டார். நாவுக்கரசர் என்று பெயர் பெற்றார். தலங்களில் சரியைத் தொண்டு புரிந்து வழிபட்டதனால் உழவாரப்படையாளி என்றும் அழைக்கப்பெற்றார்.

## பஞ்சம் நீக்கப் படிக்காசு பெற்றமை

திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் இணைந்து தலயாத்திரை செய்தனர். இறைவனைப் பாடிப் பரவிப் பணிபுரிந்து வந்தனர். ஒருமுறை காவிரிக்கரையில் உள்ள திருவீழிமிழலை என்ற தலத்தை அடைந்தனர். அடியார் கூட்டத்துடன் மடத்தில் தங்கியிருந்தனர்.

அந்தநாட்களில் மழை இன்மையால் காவிரியில் நீர் இல்லாது போனது. விளைச்சலும் அற்றுப்போனது. நாட்டில் கடும் பஞ்சம் உண்டானது. பசியால் மக்கள் துன்புற்றனர். இந்நிலை கண்டு நாயன்மார் இருவரும் வருந்தினர். மக்கள் குறை தீர்க்க வேண்டி எம்பெருமானை இறைஞ்சினர். திருவீழிமிழலைப் பெருமான் இருவர் கனவிலும் தோன்றி ''உங்கள் இருவருக்கும் படிக்காசு தருகிறோம். அதைக் கொண்டு யாவர்க்கும் உணவிடுக'' எனக் கூறியருளினார்; ஆலயத்தின் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் நாள்தோறும் படிக்காசு வைத்தருளினார்.

அப்பரும் சம்பந்தரும் தமக்குக் கிடைத்த படிக்காசைக் கொண்டு நாள்தோறும் எல்லோருக்கும் உணவு வழங்கிவந்தனர். உண்டி கொடுத்து உயிர் கொடுத்தோராயினர். படிக்காசுப் பீடங்களை, இன்றும் இக்கோயிலில் காணமுடியும்.

## பயிற்சி

1. திருஞானசம்பந்தர் திருக்கொடிமாடச் செங்குன்றூரில் செய்த மக்கள் பணி யாது?
2. 'காரைகள் கூகைமுல்லை' என்னும் பதிகம் யாரால், எதற்காகப் பாடப்பட்டது?
3. திருநாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் இணைந்து ஆற்றிய மக்கள்பணி யாது?
4. திருநாவுக்கரசர் உழவாரப்படையாளி என்று போற்றப்படுவதற்கான காரணம் யாது?

## சுந்தரமூர்த்தி நாயனார்

திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில் ஆதிசைவரான சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாக நம்பியாரூரர் திருவவதாரம் செய்தார். திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட சிற்றரசராகிய நரசிங்க முனையரையர் நம்பியாரூரர்மேல் அன்பு கொண்டு அவரைத் தம் பிள்ளையாக வரித்துக் கொண்டார். வாலிபப் பருவமடைந்த நம்பியாரூரருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. முன்வினைப் பயனால் சிவபெருமான் நம்பியாரூரரைத் திருமணப் பந்தலில் தடுத்தாட்கொண்டார்.

## தொண்டர்சீர் பரவியமை

ஒருமுறை திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார்கள் கூடியிருந்தனர். அங்கு வந்த சுந்தரர் இந்த அன்புடைத் தொண்டர்களுக்கு அடியனாகும் நாள் எந்நாளோ என்று நினைத்தபடி கோயிலினுட் சென்றார். திருத்தொண்டர்களின் பெருமையினைச் சுந்தரருக்கு உணர்த்திய சிவபெருமான் ‘தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்’ என்று அடி எடுத்துக் கொடுத்தார். சிவனடியார் அனைவருக்கும் தாம் அடிமை என்று சுந்தரர் உளமுருகிப் பாடினார். திருத்தொண்டர்களின் பெருமையை உலகறியச் செய்த பெருமைக்குரியவரானார்.

## மாணிக்கவாசக சுவாமிகள்

பாண்டி நாட்டில் திருவாதவூரில் வாழ்ந்த சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதியாருக்கும் மகனாக அவதரித்தவர் திருவாதவூரர். கல்வி, கேள்விகளில் சிறந்தவரான இவர் அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சராக விளங்கினார். இவர் ஒருமுறை அரச படைக்குக் குதிரைகள் வாங்கச் சென்றார். வழியில் திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் வீற்றிருந்த சிவனடியாரைக் கண்டு அடிபணிந்தார். அவர் சைவசித்தாந்த உண்மைகளை வாதவூரருக்கு விளக்கினார். தன்னைச் சீடனாக ஏற்குமாறு பணிந்த வாதவூரர் குதிரை வாங்குவதற்குக் கொணர்ந்த பணம் முழுவதையும் சிவப்பணிக்கே அர்ப்பணித்தார். இதனால் அரிமர்த்தன பாண்டியன் வாதவூரரைத் தண்டித்தான். இறைவன் வாதவூரர் பொருட்டுப் பல திருவிளையாடல்களை நிகழ்த்தியருளினார். இறைவனின் அளப்பரும் கருணையை நினைந்து வாதவூரர் ஊனினை உருக்கும்

திருவாசகப் பாடல்களைப் பாடியருளினார். பல தலங்களுக்கு யாத்திரை செய்து சிதம்பரத்தை வந்தடைந்தார்.

## வாய்பேசாப் பெண்ணைப் பேச வைத்தமை

அந்நாட்களில் சோழதேசத்துச் சிவபக்தர் ஒருவர் இலங்கையில் தலயாத்திரை செய்யும் காலத்தில் ''பொன்னம்பலம் நீடூழி வாழ்க'' எனச் சொல்லிக்கொண்டு சென்றார். அதைக் கண்ட பௌத்த அரசன் அவரை அழைத்து அவ்வாறு சொல்வதன் காரணத்தை வினவினான். சிதம்பரத்தின் மகிமைகளை அடியவர் அவ்வரசனுக்கு எடுத்துச் சொன்னார். உடனே அவன், சிதம்பரத்தை அழித்து பௌத்த ஆலயமாக்குவேன் என்று தன் பரிவாரங்களுடனும் தனது வாய்பேசவியலாத பெண்ணுடனும் சிதம்பரத்தை அடைந்தான். சிவனடியார்களை வாதுக்கழைத்தான். வாதத்தின்போது மாணிக்கவாசகர் அரசனின் வாய்பேசாப் பெண்ணைப் பேசவைத்தார். அரசனும் அவனுடன் வந்தவர்களும் சைவசமய உண்மைகளை உணர்ந்து சைவராயினர்.

வாதத்தில் இடம்பெற்ற வினாக்களும் விடைகளும் அமையும்படியாக மாணிக்கவாசகர் திருச்சாழலைப் பாடியருளினார்.

## பயிற்சி

1. சுந்தரர் திருத்தொண்டர்களின் பெருமையை எவ்வாறு உலகறியச் செய்தார்?
2. வாதவூரர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட தலம் யாது?
3. திருச்சாழல் என்னும் பதிகம் எவ்வாறு அமைந்துள்ளது?
4. சமயகுரவர் நால்வரும் மக்கள் பணி புரிந்ததன் மூலம் நாம் உணரக்கூடிய உண்மை யாது?

## குழுச் செயற்பாடு

நாயன்மார்கள் நிகழ்த்திய அற்புதங்களையும் அச்சந்தர்ப்பங்களிற் பாடிய தேவாரங்களையும் அட்டவணைப்படுத்துங்கள்.

# 17 திருவாசகம்



சமயகுரவர் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகள் அருளியவை திருவாசகம், திருக்கோவையார் என்பன. இவை எட்டாந்திருமுறையுள் அடங்குகின்றன. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகம், மணிவாசகர் சொல்லச் சொல்ல இறைவனால் எழுதப்பெற்ற சிறப்பினை உடையது.

மாணிக்கவாசக சுவாமிகள் அரிமர்த்தனபாண்டிய மன்னனுக்கு முதலமைச்சராக இருந்தவர். ஆனால் அவர் தனது கல்வியையோ பதவியையோ ஒருகாலமும் பெரிதாக மதித்திலர். ‘மண்ணாள்வான் மதித்தும் இரேன்’ என்று அவரே திருவாசகத்தில் கூறியுள்ளார். இவரை திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் இறைவன் ஆட்கொண்டருளினான். தன்னை ஆட்கொண்டருளிய இறைவனையும் உடனிருந்த அடியார்களையும் அவர் விட்டுப் பிரிய நேர்ந்தது. அந்நிலையில் தாயைப் பிரிந்த கன்று போல்

இறைவனை நினைந்து நினைந்து உருகலானார். அந்த உருக்கமே திருவாசகம் முழுவதும் பரந்து காணப்படுகிறது. அத்தகைய திருவாசகப் பாக்களுள் ஒன்று வருமாறு:

## வாழாப்பத்து

**தலம் - திருப்பெருந்துறை**

*திருச்சிற்றம்பலம்*

**பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே**
**பற்று நான் மற்றிலேன் கண்டாய்**
**சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே**
**திருப்பெருந்துறை உறை சிவனே**
**ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன்**
**ஆண்ட நீ அருளிலையானால்**
**வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்**
**வருக என்று அருள்புரியாயே.**



*திருச்சிற்றம்பலம்*

### பொழிப்பு

மண்ணும் விண்ணுமாய் எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் எங்கள் மேலோனே! அடியேனுக்கு நின் திருவடித்துணையின்றி வேறு பற்று ஒன்றும் இல்லை என்பதைக் கண்டருள்வாயாக; எல்லாச் சிறப்புக்களும் பொருந்தியுள்ளவரே! சிவ உலகினுக்கு வேந்தே! திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு அருளிய சிவனே! நீயே திருவருள் புரியாவிடின் பின் எவருடன் நொந்து கொள்வேன்? எவர்க்கு எடுத்துக் கூறுவேன்? கடலாற் சூழப்பட்ட இவ்வுலகினில் நின் பிரிவினைப் பொறுத்து உயிர் வாழ்கிலேன். நின் திருவடிக்கண் வருமாறு அருள்புரிவாயாக.

## அருஞ்பதம்

| | | |
|---|---|---|
| பார் | - | பூமி |
| பற்று | - | பற்றுக்கோடு |
| சீர் | - | சிறப்பு |

## பயிற்சி

1. மாணிக்கவாசகர் பாடிய நூல்கள் எவை? அவை எத்தனையாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன?
2. இறைவன் மாணிக்கவாசகரை எங்கு, எவ்வாறு ஆட்கொண்டருளினார்?
3. "பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே" என்ற தொடரில் வெளிப்படும் இறைவனின் தன்மை யாது?
4. மாணிக்கவாசகர் இறைவனைப் பிரிந்திருக்க ஆற்றாது தவிப்பதை எடுத்துக் காட்டும் வரிகள் எவை?

## குழுச் செயற்பாடு

உங்களுக்குத் தெரிந்த வேறொரு திருவாசகப் பாடலை வகுப்பில் பாடிக் காட்டுங்கள்.

# 18 விழுமியங்கள்

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். விலங்குகள் போலன்றி மேம்பாடுமிக்க வாழ்க்கையை மனிதன் நடாத்துவதற்கு, நற்பண்புகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. மனித வாழ்வை மேம்படுத்த உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமியங்கள் எனப்படுகின்றன. இப்பண்புகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உயர்வான வாழ்வை நாம் பெறலாம்.

முன்னைய வகுப்புகளிற்கூட வாழ்வை வளம்படுத்தும் விழுமிய பண்புகள் பலவற்றைப் பற்றிக் கற்றுள்ளோம். இவ்வகுப்பில் மனக்கட்டுப்பாடு, ஈதல், முதியோரைக் கனம் பண்ணுதல், மனித உரிமைகளை மதித்து நடத்தல், இயற்கையைப் பேணுதல், மங்கல வாழ்த்து ஆகிய உயர் பெறுமானங்களைப் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.





## அ. மனக்கட்டுப்பாடு

நம் எண்ணங்கள் உதிக்குமிடம் மனம் ஆகும். மனதில் உதிப்பவையே வாக்காகவும் செயலாகவும் வெளிப்படுகின்றன. மனம், வாக்கு, காயம்

என்பவையே திரிகரணங்களாகும். முதலில் மனம் அடங்க வேண்டும். மனம் அடங்கினால் தான், வார்த்தைகளும் செயல்களும் கட்டுப்பாட்டிற்குள் வரும்.

இறைவனை வழிபட மனக்கட்டுப்பாடு அவசியம். ‘அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக’ என்று சேக்கிழார் அருளியுள்ளார்.

ஆறுமுக நாவலரும் ‘மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு ...’ என்று வழிபாட்டில் மனக்கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

கல்வியில் உயரவும் மனக்கட்டுப்பாடு தேவை. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் வழியே மனம் அலைந்து கொண்டிருப்பின், கல்வியில் முழுமையாக ஈடுபட முடியாது.

யோகப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, தியானம் போன்றவை மனக்கட்டுப்பாட்டுக்கான சாதனங்களாகும். அருச்சுனன் புலன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தியதாலேயே அவனால் குறி தப்பாது அம்பெய்ய முடிந்தது.

நாமும் மனக்கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்.

### ஆ. ஈதல்

‘ஈதல் அறம்’ என்றார் ஔவைப் பிராட்டியார். தான் எள்ளளவும் பிறரிடமும் இரவாது, மற்றையோருக்கு ஈதல் இன்பம் தரும் செயல் என அறநூல்கள் கூறுகின்றன.

**‘எட்டுணையானும் இரவாது தான் ஈதல்**
**எத்துணையும் ஆற்றல் இனிது’**

(இனியவை நாற்பது)

கொடுக்கக் கொடுக்கத்தான், அதனால் வரும் இன்பத்தை நாம் உணரலாம். மற்றவருக்குக் கொடுப்பதனால் எம்மிடமுள்ள பொருள் குறைந்துவிடுமே என்று நாம் அஞ்சத் தேவையில்லை. இறையருளால் அது மேலும் வளரும் என்பது உறுதி.

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன், ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான், புறாவுக்குத் தன் தசையை வெட்டிக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி போன்றோர் கொடையால் உயர்ந்து நின்றவர்கள்.

இளையான் குடிமாற நாயனார் தினமும் ஒரு சிவனடியாருக்கு அமுதளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். கடும் வறுமை வந்துற்ற நிலையில், வயலில் விதைத்த நெல்லையே சோறாக்கி அன்னமிட்டதன் மூலம் ஈதலின் சிறப்பை எமக்கு உணர்த்தியுள்ளார். கொடைக்குக் கர்ணன் என்று எல்லோராலும் போற்றப்படும் கர்ணன் பற்றியும் நாம் அறிவோம்.

நாமும் ஔவையின் 'ஈவது விலக்கேல்' என்ற ஆத்திசூடிக் கூற்றுக்கேற்ப வாழ்வோம்; வளம் பெறுவோம்.

## இ. முதியோரைக் கனம் பண்ணுதல்

வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும் மூத்தவர்களாக முதியோர்கள் உள்ளனர். நாம் குழந்தைகளாக இருந்தபோது, அவர்கள் எமக்குப் பல வழிகளிலும் உதவி செய்துள்ளனர். எனவே இப்போது அவர்களுக்கு உதவி செய்வது எமது கடமையாகும். எமது பெற்றோரின் பெற்றோரையும் ஏனைய முதியவர்களையும் இகழக் கூடாது. அவர்களது தளர்வு, மறதி, முதுமை போன்றவற்றைப் புரிந்து நடக்க வேண்டும். வீட்டில் உள்ள முதியவர்களை முதியோர் இல்லங்களில் கொண்டு போய் விடுதல் இன்றைய நாகரிகமாகிவிட்டது. அவ்வாறு நாம் செய்தல் கூடாது. அவர்களைச் சுமையாகக் கருதக் கூடாது. அவர்களது அநுபவம், அறிவு, அன்பு என்பன என்றென்றும் எமக்குத் துணை செய்யும் என்பதை நாம் மறத்தலாகாது.



சிரவணன் எனும் சிறுவன் கண் தெரியாத தன் பெற்றோரை மிகவும் சிரத்தையுடனும் அன்புடனும் பேணிவந்தான். காவுதடி ஒன்றை அமைத்து அதில் முன் பின்னாக, இருவரையும் இருத்தி வேண்டிய இடங்களுக்குச் சுமந்து சென்றான். சிரவணன் நாடகத்தைப் பார்த்த காந்தி, பிற்காலத்தில் பெரிய மகானானார்.

நாமும் முதியோரை மதித்து, அவர்களை வணங்கி, ஆசி பெற்று வாழ்வில் உயர்வடைவோம்.

## ஈ. மனித உரிமைளை மதித்து நடத்தல்



மனிதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படை உரிமைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். உயிர் வாழும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, நாட்டில் எங்கு வேண்டுமானாலும் வாழும் உரிமை, விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை போன்றன அவற்றிற் சிலவாகும்.

இவ்வாறன மனித உரிமைகளை மதித்து நடக்க நாம் பழகிக் கொள்ள வேண்டும். உயிர்களைக் கொல்வதும், துன்புறுத்துவதும் உரிமை மீறல்களாகும். கல்வியைப் பெற வேண்டிய வயதில் சிறுவர்களை வேலைக்கு அனுப்புதல் சிறுவர் உரிமை மீறலாகும். ஒவ்வொருவருக்கும் தாம் விரும்பும் சமயத்தைப் பின்பற்றுவதற்கு உரிமை உண்டு. ஒருவரைக் கட்டாயப்படுத்தி சமயம் மாற்றுவது, சமய அடையாளச் சின்னங்களை அணிய விடாது தடுப்பது போன்ற செயல்கள் சமய உரிமை மீறல்களாகும்.

ஒவ்வொருவரும் மற்றவரது உரிமைகளை மதிக்கும்போதுதான் சமாதானம் பிறக்கும்; சாந்தி நிலவும். குறுகிய மனப்பான்மையை விடுத்து, அனைவரையும் மதிப்போம். அன்புடன் வாழ்வோம்.

## உ. இயற்கையைப் பேணுதலும் மங்கல வாழ்த்தும்



இயற்கையோடு இயைந்து வாழ்வதே வாழ்வு. இயற்கையைச் சீற்றங் கொள்ளச் செய்யும் செயல்களில் நாம் ஈடுபடுதல் கூடாது. வேதகால மக்கள், இயற்கையையே தெய்வமாக வழிபட்டனர். வருணன், அக்கினி, வாயு, சூரியன் எனும் இயற்கைச் சக்திகளை இன்றும் நாம் வழிபட்டு வருகின்றோம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவை பஞ்சபூதங்கள் எனப்படுவன. இவற்றின் நியதிக்குப் பங்கம் ஏற்படாமல் வாழப் பழகவேண்டும். பஞ்ச பூதங்களை நாம் மாசுபடுத்தக் கூடாது. வீட்டுத் தோட்டம் அமைத்தல், பூந்தோட்டம் அமைத்தல், மரம் நாட்டல், நீர் நிலைகளைப் பேணுதல் முதலியன இயற்கையைப் பேணும் செயல்களாகும். இயற்கைச் சமநிலை பேணப்படும்போது பருவநிலை மாற்றங்களிற் குழப்பம் ஏற்படாது.

இயற்கையைப் பேணுவோம்; இன்பமாய் வாழ்வோம்.

கச்சியப்ப சிவாச்சாரியார், கந்த புராணத்தின் ஈற்றில் பாடிய

***வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்***
***கோன்முறை அரசுசெய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!***
***நான்மறை அறங்கள் ஓங்க! நல்தவம் வேள்வி மல்க!***
***மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!***

என்ற மங்கல வாழ்த்துப் பாடலைத் தினமும் ஓத வேண்டும். மனமுருகிப் பிரார்த்திக்க வேண்டும். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! என்று மும்முறை ஓதி, எமக்காகவும் சுற்றத்தவருக்காகவும் பிற உயிர்களுக்காகவும் மங்கலம் வேண்டி வழிபடுவோம்.

## பயிற்சி

1. விழுமியம் என்றால் என்ன?
2. மனக்கட்டுப்பாட்டை எவற்றின் மூலம் நாம் வளர்த்துக் கொள்ளலாம்?
3. கொடையின் பெருமையை உலகத்துக்கு எடுத்துக் காட்டிய சான்றோர் நால்வரைக் குறிப்பிடுக.
4. முதியோரைக் கனம் பண்ண வேண்டியதன் அவசியம் யாது?
5. எமக்குள்ள அடிப்படை உரிமைகள் மூன்றைக் குறிப்பிடுக.
6. மும்முறை சாந்தி மந்திரத்தை ஓதுவதன் காரணம் யாது?

## குழுச் செயற்பாடு

*நீங்கள் கற்ற விழுமியங்களை வெளிப்படுத்தும் கதைகளை, வகுப்பறையில் நாடகமாக நடித்துக்காட்டுங்கள்.*

# 19 சைவசித்தாந்தத்தில் பசு

## முப்பொருள் உண்மை

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் சமயம் சைவசமயம். இது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை பற்றிக் கூறுகிறது. இவற்றை முறையே இறை, உயிர், தளை என்றும் கூறுவர். பதி என்பது இறைவனையும் பசு என்பது ஆன்மாவையும் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் குறித்து நிற்கின்றன.

அறிவிக்காமலே அறியும் பொருள் இறை; அறிவித்தால் அறியும் பொருள் உயிர்; அறிவித்தாலும் அறியாத சடப்பொருள் பாசம். பதி என்றும் உள்ள பொருளாகும். அது அனாதியானது. அதுபோன்றே பசு, பாசமும் என்றும் அனாதியானவை. அதையே திருமூலர் தம் திருமந்திரத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

***பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்***
***பதியினைப்போல் பசு பாசம் அநாதி***

## பசு

ஆன்மாக்கள் அநாதியாகவே ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசத்தால் கட்டுண்டிருப்பதால் பசு என்று அழைக்கப்படுகின்றன. இவை அறிவு, இச்சை, செயல் மூன்றும் உடையன. ஆன்மாக்கள் எண்ணிலாதன.

ஆன்மாக்கள் தாமாக எதையும் அறியமுடியாதவை. அவை அறிவித்தால் அறியும் தன்மை உடையவை. அவை தாம் சார்கின்ற பொருளின் வண்ணமாக மாறும் தன்மை கொண்டவை. அதாவது ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது.

பதி இயல்பாகவே பேரறிவுடைய சித்துப்பொருள். பசு அறிவித்தால் அறியும் இயல்புடையது. ஆதலினால் பசு சிற்றறிவுடையது. அதன் சிற்றறிவுக்குக் காரணமாகவுள்ள மலங்களிலிருந்து விடுபடும்போதே அது முத்திநிலை அடைகின்றது.

பதி சத்துப்பொருள். பாசம் அசத்துப் பொருள். ஆனால் பசுவோ பதியைச் சாரும்போது சத்துப்பொருளாக நிற்கும். பாசத்தைச் சாரும்போது அசத்துப் பொருளாக நிற்கும். இவ்விரு தன்மையும் பசுவுக்கு உள்ளதால் அது ‘சதசத்து’ என அழைக்கப்படுகின்றது. இது ஆன்மாவின் இயல்பாகக் கூறப்படுகிறது (சத்து +அசத்து = சதசத்து).

ஆன்மாக்கள் மூவகைப்படும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலமுடையோர் சகலர் எனப்படுவர். ஆணவம், கன்மம் ஆகிய இருமலமுடையோர் பிரளயாகலர் எனப்படுவர். ஆணவமலம் மட்டுமுடையோர் விஞ்ஞானகலர் எனப்படுவர். இம் மலங்களினின்றும் நீங்கி இறை அனுபவம் பெற்று முத்தியடைவதே ஆன்மாவின் இலட்சியமாக உள்ளது.

ஆணவமலத்தால் பீடிக்கப்பட்டு உயிர் எவ்வித அறிவுமற்று இருக்கும் நிலை கேவல அவத்தை எனப்படும். உயிரானது மும்மலத்தாலும் பீடிக்கப்பட்ட (உடல் பெற்று சிற்றறிவுடன் இருக்கும்) நிலை சகலாவத்தை (சகல + அவத்தை) எனப்படும். தற்போது நாம் இருப்பது சகலாவத்தையிலேயே ஆகும். மும்மலமும் நீங்கி, உயிர் இறையுடன் கலக்கும் நிலை சுத்த அவத்தை (சுத்தாவத்தை) எனப்படும்.

## பயிற்சி

1. முப்பொருள் எனப்படுபவை எவை?
2. பசு என்பதன் பொருள் யாது?
3. பசுவை சதசத்து என்று அழைப்பதன் காரணம் யாது?
4. மூவகை ஆன்மாக்களும் எவை? ஆன்மாக்கள் எவ்வடிப்படையில் மூவகையாகப் பிரிக்கப்படுகின்றன?
5. பதிக்கும் பசுவிற்குமான வேறுபாடுகள் மூன்று தருக.

## குழுச் செயற்பாடு

பதியின் இலக்கணங்களையும், பசுவின் இலக்கணங்களையும் அட்டவணைப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

# 20 திருவிசைப்பா திருப்பல்லாண்டு

## திருவிசைப்பா




சைவத் திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டவை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பனவாகும். திருவிசைப்பாவைத் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்னும் ஒன்பது பேரும் அருளினர்.

திருவிசைப்பா என்னும் தொடர் தெய்வத்தன்மையுள்ள இறைவன் புகழைக் கூறும் இசைப்பாடல் எனப் பொருள்படும்.

திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் இறைவனைத் துதித்து சேந்தனார் அருளிய திருவிசைப்பா இதுவாகும்.

தலம்- திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம்

பண் - பஞ்சமம்

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என் உயிர்க்கு அமுதினை எதிர்இல்
போக நாயகனை புயல்வணற்கு அருளிப்
பொன் நெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டு என உணர்கிலேன் யானே.



திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

ஒப்பற்ற ஒரே தலைவனாக இருப்பவனை, தேவர்களுக்கு அரசனாகத் திகழ்பவனை, எனது உயிர்க்கு அமுதம் போல இனியவனாய் இருப்பவனை, இணையில்லாத சிவானந்தமாகிய இன்பத்தை ஊட்டும் தலைவனை, மேகம் போன்ற நிறத்தினனான திருமாலுக்குச் சக்கரம் அளித்து அருள்செய்து, அத் திருமாலையே பொன்னாலாகிய நீண்ட சிவிகையாகக் கொண்டு ஏறிச்செலுத்திய மேகம் போலும் கைம்மாறு கருதாத தலைவனாகிய சிவபெருமானை, மேன்மை மிகுந்த திருவீழிமிழலையில் தேவலோகத்தினின்றும் இறங்கி வந்த செழுமையான கோயிலிலே எழுந்தருளிய சிவயோகங்களுக்குத் தலைவனாய் இருப்பவனை அல்லாது வேறொரு பொருளும் இருப்பதாக யான் உணரவில்லை.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| ஏகம் | - | ஒன்று |
| புயல்வணன் | - | மேக நிறத்தவன் (விஷ்ணு) |
| சிவிகை | - | பல்லக்கு |

குறிப்பு - திருவீழிமிழலையில் உள்ள கோயில் விமானம் 'விண்ணிழி விமானம்' என வழங்கப்படும். விண்ணுலகிலிருந்து திருமால் அவ்விமானத்தினைக் கொணர்ந்தமையால் அது அப்பெயர் பெற்றது. திருமால் நாள்தோறும் ஆயிரம் பூக்களைக் கொண்டு சிவபெருமானை அருச்சித்து வந்தார் எனவும், ஒருநாள் அப்பூக்களில் ஒன்று குறையவே அவர் தாமரை போன்ற தம் கண்களில் ஒன்றைப் பெயர்த்து அருச்சனை புரிந்தார் எனவும் சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரப் படையை அருள் செய்தார் எனவும் திருமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

## பயிற்சி

1. ஒன்பதாம் திருமுறையுள் அடங்குபவை எவை?
2. திருவிசைப்பா பாடியோர் எத்தனை பேர்? அவர்களின் பெயர்களைத் தருக.
3. திருவிசைப்பா என்னும் தொடரின் பொருள் யாது?
4. இங்கு இறைவனை விளித்துப்பாடிய தொடர்களைத் தருக.

### திருப்பல்லாண்டு

ஒருமுறை சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவிலே தேர்ச் சக்கரம் சேற்றில் அழுந்திப் புதைந்துவிட்டது. அச்சந்தர்ப்பத்தில் சேந்தனார், தேர் தானே அசைந்தோடும் வண்ணம் சிவனை வாழ்த்திப் பாடியது திருப்பல்லாண்டு என்னும் பதிகமாகும். என்றுமுள்ள இறைவனைப் பல்லாண்டு வாழ்க என அன்பு மீதூர, பதின்மூன்று பாடல்களில் வாழ்த்தித் துதித்துள்ளார் சேந்தனார். அதில் ஒரு பாடல் வருமாறு.

திருச்சிற்றம்பலம்

தலம் : தில்லை

பண் : பஞ்சமம்

**மிண்டு மனத்தவர் போமின்கள், மெய்யடியார்கள்**
**விரைந்து வம்மின்**
**கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு**
**ஆட்செய்மின், குழாம்புகுந்து**
**அண்டம் கடந்த பொருள் அளவில்லதோர்**
**ஆனந்த வெள்ளப்பொருள்**
**பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே**
**பல்லாண்டு கூறுதுமே.**



திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு

எம்பெருமானாகிய சிவபெருமானை வணங்காமை காரணமாக முரண் பட்ட மனதை உடையவர்கள் இவ்விடத்தில் நில்லாமல் அகலுங்கள். எம்பெருமான்மீது மெய்யன்பு பூண்ட அடியார்கள் விரைவாக இங்கு வாருங்கள். நீங்கள் இந்த அடியார்கள் கூட்டத்தில் புகுந்து அயரா அன்பு கொண்டு உங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவருக்கு கொடுத்தும் வழிவழியாக அவருக்கு அடிமை பூண்டும் தொண்டு செய் யுங்கள். எல்லா அண்டங்களுக்கும் அப்பாற்பட்ட பரம்பொருளான எம் பெருமான் எல்லை கடந்த ஆனந்த வெள்ளம் போன்று அளவு கடந்த இன்பமயமான பொருள். அன்றும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்று (நாம் அவனை) வாழ்த்திப் பல்லாண்டு பாடுவோமாக.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| மிண்டுமனத்தவர் | - | முரண்பட்ட மனத்தவர் |
| பண்டு | - | முன்பு |

## பயிற்சி


1. திருப்பல்லாண்டு யாரால் பாடப்பெற்றது?
2. திருப்பல்லாண்டு பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
3. தில்லையில் யார் அகல வேண்டும், யார் வர வேண்டும் என்று சேந்தனார் பாடுகிறார்?
4. இப்பாடலில் இறைவனது இயல்புகளாகக் காட்டப்பட்டுள்ளவை யாவை?

## குழுச் செயற்பாடு

நீங்கள் அறிந்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல் ஒவ்வொன்றை இசையோடு பாடுங்கள்.

# 21 திருமந்திரம்,பெரியபுராணம் திருப்புகழ்

## திருமந்திரம்



திருமந்திரம் திருமூல நாயனாரால் பாடப்பெற்றது; மூவாயிரம் பாடல்களைக் கொண்டமைந்தது; பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

திருமந்திரப் பாடல்கள் எளிய மொழி நடையில் ஆழமான கருத்துக்களுடன் பாடப் பெற்றுள்ளன. திருமந்திரம் தோத்திர நூலாக மட்டுமன்றி சாத்திர நூலாகவும் போற்றப்படுகிறது. பின்வரும் திருமந்திரப் பாடல் சிவநாமத்தின் சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

*திருச்சிற்றம்பலம்*

***சிவசிவ என்கிலர் தீவினையாளர்***<br>
***சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்***<br>
***சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்***<br>
***சிவசிவ என்னச் சிவகதி தானே.***

*திருச்சிற்றம்பலம்*



### பொழிப்பு

சிவாயநம எனும் பஞ்சாட்சர மந்திரத்தின் சுருக்கமான - சூக்கும - வடிவமான ‘சிவ சிவ’ என்ற மந்திரத்தை தீவினையாளர் சொல்லமாட்டார். சொல்வாராயின், தீவினை ஒழியும்; புண்ணியம் வளரும்; தேவருமாவர்; முடிவிலே சிவகதியாகிய முத்தியும் பெறுவார்.

## பயிற்சி

1. திருமந்திரத்தைப் பாடியவர் யார்?
2. திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்குகிறது?
3. பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிப்பதனால் உண்டாகும் நன்மைகள் எவை?

## பெரியபுராணம்



பெரியபுராணம் சேக்கிழார் சுவாமிகளாற் பாடப்பெற்றது. சுவாமிகள், சோழ அரசனின் முதன்மந்திரியாக இருந்தார். சமயாசாரியர்களின் பெருமையை எமக்கு உணர்த்திய பெருங்குரவர் இவரேயாவார். அறுபத்துமூன்று நாயன்மார்கள் (தனி அடியார்கள்) மற்றும் ஒன்பது தொகை அடியார்கள் ஆகியோரின் வரலாற்றைப் பக்திரசம் ததும்ப இயற்றியுள்ளார்.

காரைக்காலம்மையார் பற்றிய வரலாற்றில் சேக்கிழார் பாடிய பாடலையும் அதனூடாக காரைக்காலம்மையாரின் வேண்டுதலையும் இங்கு நாம் காண்போம்.

இறைவனால் ‘அம்மையே!’ என்று அழைக்கப்பெற்ற பெரும் பேற்றைப் பெற்றவர் காரைக்காலம்மையார் ஆவார். கணவனான பரமதத்தன் அவரைத் தெய்வம் எனக் கருதி வழிபட்டான். இதனால் காரைக்காலம்மையார் இறைவனைத் துதித்து , யாவரும் வெறுத்து ஒதுக்கும் பேயுருவை வேண்டிப் பெற்றார். அவர் திருக்கைலாசநாதரைத் தரிசிக்கும் ஆவலுடன் விரைந்தார். இறைவன் விரும்பி உறையும் தலமாதலால் அதனைக் காலால் மிதிக்காது தலையினால் நடந்து மலையேறிச் சென்றார். வருகின்ற உருவைக் கண்டு அதிசயித்த உமையம்மை இவர் யாரெனப் பெருமானிடம் வினவினார். ‘‘வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே! இப்பெருமை சேர் வடிவம் நம்மை வேண்டிப் பெற்றனள்’’ என்றார். இறைவன் காரைக்காலம்மையாரை ‘‘அம்மையே’’ என்றழைக்க அம்மையார் ‘‘அப்பா’’ என்று அவர் செம்பொற் பாதம் பணிந்தெழுந்தார். அவரை நோக்கிப் பரமசிவன் ‘‘நம்பால் நீ வேண்டுவது யாது?’’ என்று வினவ, அம்மையார் அவர்பால் வேண்டிய வரத்தை விளக்குவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

*திருச்சிற்றம்பலம்*

***இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்***
***பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்***
***மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி***
***அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.***

*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

எக்காலத்தும் அழிவில்லாத இன்பம்தரும் கருணையைப் பிரார்த்தித்து மீண்டும் வேண்டுகின்றார். இவ்வுலகிலே பிறப்பில்லாத நிலையை அருள வேண்டும். மீளவும் பிறப்பு இருந்தால் எம்பெருமானே உன்னை எப்போதும் மறவாத மனம் வேண்டும். இன்னும் ஒன்று வேண்டும், இறைவா! நீ ஆனந்தநடனம் ஆடும் போது நான் உனது புகழை மகிழ்ச்சியுடன் பாடியவாறு உன் திருவடிக்கீழ் இருக்கும் பேற்றினை அருள்வாயாக! என்று வேண்டினார்.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| இறவாத | - | அழிவில்லாத |
| அறவா | - | அறக் கடவுளே |

## பயிற்சி

1. பெரியபுராணம் எத்தனை அடியார்களின் வரலாற்றைக் கூறுகிறது?
2. 'இறவாத இன்ப அன்பு வேண்டும்' என்று வேண்டியவர் யார்? யாரிடம் வேண்டினார்?
3. மீண்டும் பிறப்புண்டானால், யாது வேண்டுமென காரைக்காலம்மையார் வேண்டுகிறார்?

## திருப்புகழ்



திருப்புகழ் முருகப்பெருமானின் அருட்பண்புகளையும் அருட் செயல்களையும் புகழும் நூல். இதனை இயற்றியவர் அருணகிரிநாதர். இவர் பழுத்த புலமையும், முருகப்பெருமானின் திருவருள் அனுபவமும் வாய்க்கப் பெற்றவர். திருவண்ணாமலையைச் சார்ந்த ஓர் ஊரில் பிறந்தவர். திருவண்ணாமலைச் சிவன் கோபுரத்தடியில் எழுந்தருளிய திருமுருகன் திருவருளால் திருப்புகழ் பாடும் ஆற்றல் பெற்றவர். இவர் தமிழகத்தில் உள்ள முருகன் தலம் தோறும் சென்று திருப்புகழ் பாடியுள்ளார். திருப்புகழ் மட்டுமன்றி கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம் என வேறு நூல்களையும் இவர் அருளிச் செய்துள்ளார்.

*திருச்சிற்றம்பலம்*

**பத்தியால் யான் உனைப் பலகாலும்**
**பற்றியே மாதிருப்புகழ் பாடி**
**முத்தனாமாறு எனைப் பெருவாழ்வில்**
**முத்தியே சேர்வதற்கு அருள்வாயே**
**உத்தமாதான சற்குண நேயா**
**ஒப்பிலா மாமணிக் கிரிவாசா**
**வித்தகா ஞான சத்திநிபாதா**
**வெற்றி வேலாயுதப் பெருமாளே.**



*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

உத்தமனே! ஈகைக்குணம் உள்ள நற்குணத்தவர்களுக்கு நேசனே! நிகரில்லாத சிறந்த இரத்தினகிரி வாசனே! வித்தகனே! ஞான பக்குவம் அடைந்தவர்க்கு அனுக்கிரக சக்தியாய்ப் பதிகின்றவனே! வெற்றி பொருந்திய வேலாயுதத்தினை ஏந்தியுள்ள பெருமாளே! பக்தியொடு நான் உன்னை எப்பொழுதும் உள்ளத்தில் தியானித்து, சிறந்த உனது திருப்புகழ்களைப் பாடி ஞானநிலை பெற்றவனாகுமாறு, பெருவாழ்வாகிய முத்தி நிலையை அடைய அருள்புரிவாயாக.

## அரும்பதம்

பலகாலும் - பல முறையும்

வித்தகா - அறிஞனே

## பயிற்சி

1. அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள் எவை?

2. இத்திருப்புகழில் முருகப் பெருமானை விளித்துப் பாடிய சொற்களைத் தருக.

3. அருணகிரிநாதர் முருகப்பெருமானிடம் கேட்கும் வரம் யாது?

## குழுச் செயற்பாடு

*திருமூலரின் கதையைத் தேடியறிந்து வகுப்பறையில் சமர்ப்பியுங்கள்.*

# 22 நாட்டார் வழிபாடு



எமது வழிபாட்டு முறைகள், ஆகம நெறி சார்ந்த வழிபாடு, ஆகம நெறி சாராத வழிபாடு என இருவகையினவாகும். ஆகமம் சார்ந்த வழிபாடு விதிமுறைகளோடு கூடிய கிரியை வழிபாட்டுடன் நடாத்தப்படுவது ஆகமம் சாராத வழிபாடு பயபக்தி, நம்பிக்கையுடன் கூடிய சடங்குகளின் அடிப்படையில் அமையப் பெற்றது. கிராமிய வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு போன்ற பெயர்களாலும் நாட்டார் வழிபாடு அழைக்கப்படுகிறது.

நாட்டார் வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் குளக்கரை, வயல்வெளி, ஆற்றங்கரை, மரநிழல், தெருவோரம் என்பவற்றில் குடிகொண்டிருப்பவை. இத்தெய்வங்கள் கற்கள், மரங்கள், சூலம், புற்று, தடிகள் ஆகியவற்றில் உறைந்திருப்பவை என்ற நம்பிக்கை பொதுவாக உண்டு. நம்பிக்கை, பயம் என்பவற்றின் அடிப்படையிலேயே இங்கு சடங்குகள் மேற்கொள்ளப்படும். தெய்வத்தின் உத்தரவு பெற்றே பூசாரி சடங்குகளை ஆற்றுவார். ஊர்காவல்

செய்தல், மடை பரவுதல், பண்டம் எடுத்தல், தெய்வமாடுதல், தீமிதித்தல் முதலிய சடங்குகள் நிகழ்த்தப் பெறும். வழிபாட்டு முறைகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும்.

நாட்டார் வழிபாட்டுத் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், கற்றெய்வங்கள் என மூவகைப்படுத்தலாம். ஐயனார், வைரவர், வீரபத்திரர், பெரியதம்பிரான், பூதையார், மதுரைவீரன், குமாரத்தன் போன்றோர் ஆண் தெய்வங்களாகவும் மாரியம்மன், கண்ணகியம்மன், திரௌபதியம்மன், நாச்சிமார் போன்றோர் பெண் தெய்வங்களாகவும் எல்லைக்கல், நாட்டார் கல் போன்றன கற்றெய்வமாகவும் வழிபடப்படுகின்றன.

## மதுரை வீரன்



மதுரை வீரன், காசியில் பிறந்து, திருச்சியில் புகழ்பெற்று மதுரையில் தெய்வமாகியவன். கதைப்பாடல்களும், வில்லுப்பாடல்களும், கூத்துப்பாடல்களும் இவன் புகழ் பாடி வருகின்றன.

மதுரை வீரன் குதிரையில் வாளுடன் வந்து தீயவர்களை அழிப்பான் என்று மக்கள் நம்புகிறார்கள். ஆற்றல் பொருந்திய சிறந்த வீரனாகக் கருதப்படுகிறான்.

மதுரை வீரனுக்கு ஆண்டுப் பொங்கல் வைத்து வழிபடுவர். பூசாரி பறை, உடுக்கு, தப்பு, சங்கு ஒலிக்க கலை ஆடுவார். காவல் தெய்வமாகவும் குலதெய்வமாகவும் மதுரை வீரனைத் தென் இந்தியாவில் வழிபடுகின்றனர். இலங்கையில் மலையகப் பகுதிகளில் இவ்வழிபாடு காணப்படுகிறது.

## குமாரத்தன்



குமாரத்தனைக் குமாரதம்பிரான் எனவும் அழைப்பர். இவன் வேடர்களால் வழிபடப்படும் நாட்டார் வழிபாட்டுத் தெய்வமாவான். முருக வழிபாட்டுடனும் இவ்வழிபாடு தொடர்புபடுத்தப்படுகிறது.

கையில் கோடரி, பொல்லு ஆகிய ஆயுதங்களைத் தாங்கியவனாக குமாரத்தன் காணப்படுவான். முக்கோணப் பந்தல் அமைத்து மூன்று பக்கமும் இயற்கைப் பொருள்களால் அலங்கரித்து, சேலை விரித்து மடை பரவி வழிபாடு நடைபெறும். ஆவணி மாதத்தில் கதிர்காமத் தீர்த்தம் நடைபெறும் அன்று ஆரம்பமாகும் சடங்குகள் ஏழு நாட்களுக்குத் தொடர்ந்து இடம்பெறும். ஈற்றில் கட்டுச் சொல்லுதலும் பூசாரியால் மேற்கொள்ளப்படும்.

இலங்கையில் பாணமை, பொத்துவில், மல்வத்தை போன்ற இடங்களில் குமாரத்தன் வழிபாடு காணப்படுகிறது.

## பயிற்சி

1. நாட்டார் வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் குடி கொண்டிருப்பதாகக் கருதப்படும் இடங்கள் யாவை?
2. நாட்டார் வழிபாட்டுச் சடங்குகள் ஐந்து கூறுக.
3. மதுரை வீரனை மக்கள் வழிபடுவதன் நோக்கம் யாது?
4. குமாரத்தன் வழிபாடு எங்கெங்கு காணப்படுகிறது?
5. நாட்டார் வழிபாட்டு அம்சங்கள் மூன்று கூறுக.

## குழுச் செயற்பாடு

ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகளையும், ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளையும் வேறுபடுத்தி அட்டவணைப்படுத்துக.

## எங்கள் நாட்டிலுள்ள சமயங்கள்

### அ. இந்து சமயம்



உலக சமயங்களில் ஒன்றாகவும், பழமையான வரலாற்றினைக் கொண்டதாகவும் விளங்குவது இந்து சமயம் ஆகும். இது சனாதன தர்மம் என்று அழைக்கப்படுகின்றது. இது அறுவகைச் சமயப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டது. அவை சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன சிவனைப் பரம்பொருளாகக் கொண்டது சைவம். வைஷ்ணவம் விஷ்ணுவையும், சாக்தம் சக்தியையும் முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளன. கணபதியை முழுமுதலாகக் கொண்டது காணாபத்தியம். குமரக்கடவுளை அடிப்படையாகக் கொண்டது கௌமாரம் ஆகும். சௌரம் சூரியனை முழுமுதற் தெய்வமாகப் போற்றுவது, இவற்றுள் சைவமும், வைஷ்ணவமும் இருபெரும் சமயங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பல சமயப் பிரிவுகள் காணப்பட்டாலும்

- கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும்
- இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும் தமது சமயத்திற்குப் பொதுவான ஆதார நூல்கள் என்பதையும் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

◈ ஒவ்வொரு சமயத்துக்கும் தனித்தனி ஆகமங்கள் உள்ளன.

உலகின் அனைத்துப் பாகங்களிலும் இந்துக்கள் பரந்துபட்டு வாழ்கின்றனர். இந்து மதம் வாழ்க்கை வாழ்வதற்கே என்பதையும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதன் மூலம் இறைவனை அடையலாம் என்பதையும் வற்புறுத்துகிறது.

ஆன்மாக்கள் அறிவுவழி, அன்பு வழி, செயல் வழி மூலம் உயர் குறிக்கோளான முத்தியை அடையலாம். இவை மூன்றும் ஒன்றுக்கொன்று உறுதுணையானவை. இந்து மதத்தின் சிறப்பியல்புகளாக

1. அதன் தொன்மை
2. அறநெறி வாழ்க்கை
3. அன்புநெறி
4. கலைகளை சிறப்பாகக் கொள்ளுதல்
5. இயற்கையைத் தெய்வமாகப் போற்றுதல்
6. வாழும் வாழ்க்கையூடாகவே இறைவனை அடைதல்

போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

***‘அன்பும் சிவமும் இரண்டு என்பார் அறிவிலார்***
***அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்***
***அன்பே சிவம் ஆவது யாரும் அறிந்தபின்***
***அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே’***

-திருமந்திரம்

## ஆ. பௌத்த சமயம்

புத்தரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது பௌத்த மதம். சித்தார்த்தர் என்ற இயற் பெயரையுடைய இவர் இளவரசராக இருந்தார். ஆடம்பர வாழ்க்கையில் வளர்ந்த சித்தார்த்தர், மக்களின் துன்பங்களைக் கண்டாரல்லர். ஆனால், குறுகிய காலத்தில் மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய மூன்று நிகழ்வுகளையும் கண்ணுற்ற போது, இவ்வுலக வாழ்வு துன்பம் நிறைந்தது என உணர்ந்தார்.

அரச பதவியையும், மனைவியையும், குழந்தையையும் துறந்து, ஆறு ஆண்டுகள் அலைந்து திரிந்து, வாழ்வைப் பற்றிய தீவிர தேடலில் ஈடுபட்டார். வெள்ளரசு மர நிழலில் அமர்ந்திருந்த புத்தருக்கு ஒரு வைகாசி விசாக நாளில் பின்வரும் உண்மைகள் புலனாகின.

- வாழ்கையில் எல்லோருக்கும் துன்பம் நேரிடுகிறது.
- இதற்குத் திட்டவட்டமான காரணம் உள்ளது.
- அக் காரணங்களை அகற்றினால் கவலை நீங்கும்.
- துன்பத்திலிருந்து விடுதலை பெறும் வழி உண்டு.

இவ்வாறு மெய்யுணர்வு கைவரப் பெற்ற புத்த பகவான் மனிதப் பிறப்பின் உயர்வு, சமத்துவம், சமூக ஏற்றத்தாழ்வின் கொடுமை உதவி செய்தலின் முக்கியத்துவம் போன்றவற்றை மக்களுக்கு உபதேசித்தார். ஆசையே துன்பத்துக் குக் காரணம் என்பது புத்தரின் முக்கிய போதனையாகும்.

இலங்கை, தாய்லாந்து, பர்மா, முதலான ஆசிய நாடுகளில் பௌத்த மதம் இன்று நன்கு வியாபித்துள்ளது. இலங்கையில் தேரவாத பௌத்தம் மக்களால் பின்பற்றப்படுகின்றது.

உலகிலுள்ள பௌத்தர்கள் யாவரும் கருணை நிறைந்த புத்த பகவான் பிறந்த, ஞானம் பெற்ற, பரிநிர்வாணமடைந்த நாளான வைகாசி விசாக நாளில் பெருவிழா எடுத்துக் கொண்டாடுகின்றனர். பௌத்தர்களின் புனித நூல் 'திரிபிடகம்' ஆகும்.

## இ. இஸ்லாம் சமயம்

தென்மேற்கு ஆசியாவிலுள்ள அரேபியா என்னும் பிரதேசத்திலேயே இஸ்லாமிய சமயம் தோற்றம் பெற்றது. அல்லாஹ்வின் இறுதித் தூதரான முஹம்மது நபி(ஸல்) என்பவரே இஸ்லாமிய சமய போதனையை ஆரம்பித்தார். இஸ்லாம் சமத்துவம், சகோதரத்துவம் பற்றி சிறப்பித்துப் பேசும் மதம்.

முஹம்மது நபி பெற்ற தூதுச்செய்திகள் அனைத்தும் அவரது சீடர்களால் மனனம் செய்யப்பட்டன. எழுதியும் வைக்கப்பட்டன. இவை யாவும் கோவை செய்யப்பட்டு 'அல்குர்ஆன்' என அழைக்கப்படுகிறது. இதுவே முஸ்லிம்களின் வேதநூலாகும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள், மக்காவில் சில காலம் வாழ்ந்து பின் மதீனா சென்று அங்கும் இஸ்லாத்தைப் பரப்பினார். நபியவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவை அடைந்த நிகழ்ச்சி 'ஹிஜ்றத்' என்று கூறப்படுகின்றது. இந் நாளிலிருந்தே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகின்றது.

இஸ்லாமியர்கள் முஹம்மது நபி அவர்களது பிறந்த நாளை 'மீலாதுன்-நபி' தினமாகக் கொண்டாடுகின்றனர்.

ஒரு மாத காலம் நீடிக்கும் றம்ழான் நோன்பின் முடிவில் கொண்டாடப்படும் 'ஈதுல்-பித்ர்' இவர்களது இரண்டு பிரதான பண்டிகைகளுள் ஒன்றாகும். நோன்பு நோற்கும் காலங்களில் ஏழைகளுக்கு உணவு, உடை, பானம் போன்றவற்றை வழங்கி மகிழ்வர்.

உலகளாவிய ரீதியில் இன்று இஸ்லாமியர் பரந்துபட்டு வாழ்கின்றனர்.

## ஈ. கிறிஸ்தவ சமயம்

கிறிஸ்தவர்கள் என்போர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் சமயக் குழுவினராவர். இவர்களின் புனித நூல் ''திரு விவிலியம்'' ஆகும். உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவராவர். இறைமகன் இயேசு பிரான் மனுவுரு எடுத்து, இப்பாவ உலகிற்கு வந்ததாகவும், கன்னிகையான மரியிடம் தூய ஆவியால் உற்பவித்ததாகவும் கூறப்படுகின்றது. பின்பு பாடுபட்டு முழு உலக மீட்புக்காகவும் மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்ததாகவும் நம்பப்படுகின்றது. இதை கிறிஸ்தவர்கள் ஆழமாக விசுவாசிப்பர்.

இயேசுபிரான் பூவுலகில் அவதரித்த தினத்தை ''நத்தார்'' தினமாகவும், சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததை ''உயிர்த்த ஞாயிறு'' தினமாகவும் கிறிஸ்தவர்கள் கொண்டாடுவர்.

கிறிஸ்தவ மதத்தின் பூர்வீகம் மத்திய கிழக்கு நாடுகளாகும். இவையே இன்றைய ஈரான், துருக்கி, சிரியா ஆவன. இன்று கிறிஸ்தவர் அடங்கிய குழுவே ''உலக திருச்சபை'' எனப்படுகிறது. ''இயேசுவை விசுவசிப்போர் மீட்படைவர்'' என்பதே இம் மதத்தின் குறிக்கோளாகும்.

**'வானும் மண்ணும் அழிந்து போகும் - ஆனால்**
**உமது வார்த்தைகளோ அழிந்து போகாது"**

-திரு விவிலியம்